விலை ரூபா 5-00 Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

அதி நவீன மோஸ்தர்களில்
தரம் குன்றா
தங்க நகைகளுக்கு
அர்ச்சனா
ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி,
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 புரட்டாதி 14 ஞாயிற்றுக்கிழமை (30-09-2001) தொலைபேசி 3378 ஒலி 293

## தற்கொலையாளி அணியும் அங்கி குண்டுடன் கொழும்பில்கண்டுபிடிப்பு

### படைத் தரப்பில் பதகளிப்பு

(கொழும்பு)

கொழும்பு விகாரமா தேவி பூங்காப்பகுதியில் மூன்றரைக் கிலோக்கிராம் எடையுள்ள குண்டுகள் பொருத்தப்பட்ட தற்கொலையாளி அணியும் விசேட அங்கியொன்று. நேற்றுக் கறுவாத்தோட்டப் பொலிசாரால் கைப்பற்றப் பட்டுள்ளது

அதிசக்திவாய்ந்த குண்டு பொருத்தப்பட்ட மேற்படி தற்கொலையாளி அணியும் அங்கி. பூங்காவின் பின்பக்க வாசல் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்தது.

இதனை அப் பகுதியை சுத்தப்படுத்தும் சுகாதாரத் தொழிலாளிகள் அவதானித்து அதுபற்றி கறுவாத் தோட்ட பொலிசாருக்கு தகவல் கொடுத்தனர்.

இதனையடுத்து அப் பகு திக்கு விரைந்த பொலிசார் மறைத்து வைக்கப்பட்டிருந்த அங்கியை கைப்பற்றிய துடன், அதில்பொருத்தப்பட்டிருந்த குண்டுகளையும் செயலிழக்கச் செய்தனர்.

சீ-4 வகை குண்டுகள் பொருத்தப்பட்ட இவ் தற்

(08ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் மீதான தடையை அமெரிக்கா நீடிக்குமா? அருத்தவாரம் தெரியவரும்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் மீது அமெரிக்கா விதித்த தடை மேலும் இரண்டு வருடங்களுக்கு நீடிக்கப்படுமென வெளியுறவு அமைச்சு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள ளதாக ஐலண்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

1997ம் ஆண்டு ஒக்டோபர் 8ந்திகதி விடுதலைப் புலிகள் மீது அமெரிக்கா பயங்கரவாதம் பட்டியலின் கீழ் தடை விதித்தது.

இரண்டு வருடங்களுக்கு ஒருதடவை தடையை மீளாய்வு செய்யும்வகையில்1999ம் ஆண்டு ஒக்டோபரில் மீண்டும் தடை இரண்டு வருடங்களுக்கு நீடிக்கப்பட்டது.

தற்பொழுது அமெரிக்க அரசுபுலிகள்மீதுவிதித்ததடை தளர்வடைய இன்னமும் ஒன்பது நாட்கள் உள்ளது.

இந் நிலையில் அமெரிக்கா புலிகள் மீதான தடையை மேலும் இரண்டு வருடங்களுக்கு நீடிப்பதாக இல்லையா

(08ம் பக்கம் பார்க்க

## சட்டவிரோதமாக நுழைந்த 116 இலங்கையர்களை யேமன்திருப்பி அனுப்பியது!

(வெளிநாட்டுச் செய்திச் சேவை)

யேமன் நாட்டின் ஏடன் துறைமுகத்தினுள் சட்ட விரோதமாக நுழைந்த 116 இலங்கையர்கள் நேற்று இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். இவர்களில சிங்களவர்களும் தமிழர்களும் அடங்குவர்,

ரஷ்ய வாடகை விமானம் மூலம் திருப்பி அனுப்பி வைக்கப்பட்ட 116 பேரும் கட்டுநாயக்கா விமான நிலைய குற்றத் தடுப்புப் பொலிஸ் அதிகாரிகளினால் கைதுசெய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர்,

கடந்த மாதம் குறித்த 116 இலங்கையர்களும் சட்ட விரோதமாக இரண்டு படகுகள் மூலம் ஏடன் துறைமுகத்தினுள் நுழைந்தபோது ஏடன் துறைமுக அதிகாரிகளினால் இவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டிருந்தனர்.

திருப்பி அனுப்பிவைக்கப்பட்ட116பேரும வாடகைக்கு அமர்த்தப்பட்ட ரஷ்ய விமானங்கள் மூலம் நேற்று பி. பகல் 3.30 மணியளவில் இலங்கைக்கு வந்து சேர்ந்த போது இவர்கள் அனைவரும்

(8ஆம் பக்கம் பார்க்க]

## பொலிஸ் மீது தாக்குதல்

(வவுனியா)

வவுனியா மன்னார்வீதியில் காமினி மகாவித்தியாலயத்துக்கு அருகில் அமைந்துள்ள பொலிஸ் காவலரண் மீது நேற்று அதிகாலை 1.30மணியளவில் கைக்குண்டுத் தாக்குதலொன்று இடம்பெற்றுள்ளது.

இத்தாக்குதலில் ஒருபொலிஸ் அதிகாரி மற்றும் பொதுமகன் ஒருவர் படுகாயமடைந்துள்ளதாகவும் இதனைவிடுதலைப்புலிகளே மேற்கொண்டதாகவும் வவுனியாப்பொலிசார் தெரிவித்துள்ளனர். (இ)

## க. பொ. த உயர்தர பரீட்சையில் மோசடி!

### பரீட்சை ஆணையர் தகவல்

(கொழும்பு)

கடந்த ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற க.பொ.த உயர் தரப் பரீட்சையில் மோசடி இடம் பெற்றதென முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் ஏ.எம். ஆர். பி. அமரக்கோன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கை

[08ஆம் பக்கம் பார்க்க]

## காலியில் 14 தமிழர் கைது

காலிநகர்ப் பகுதியில் பொலிசார் மேற்கொண்ட தேடுதலின் போது 14 தமிழர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்;

50 பேரைக்கொண்ட விசேட அதிரடிப்பொலிசார் நேற்றுக்காலை திடீரென மேற்கொண்ட தேடுதலின்

(08ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்- கொழும்பு விமான பயணசேவை குறைப்பு?

(கொழும்பு)

யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையிலான விமான சேவையை மட்டுப்படுத்துவது குறித்து உள்நாட்டு விமானசேவைக்குப் பொறுப்பான 'ஹெலிடூர்ஸ்' நிறுவனம் ஆராய்ந்து வருகிறது.

சேவையில் பயணிகள் எண்ணிக்கை குறைவாக இருப்பதாலேயே விமானசேவையை மட்டுப்படுத்துவது குறித்து ஆராயப்படுகிறது.

தற்போது இவ் விமான சேவை வாரத்தில் ஆறு நாட்கள் நடைபெறுகின்றன; மூன்று நாட்கள் மூன்று சேவையும் மிகுதி மூன்று நாட்கள் இரண்டு சேவையும் நடைபெறுவதுடன் ஞாயிற்றுக் கிழமைகளில் சேவை இடம் பெறுவதில்லை

இதேவேளை குடாநாட்டில் காணப்படுகின்ற யுத்த அச்ச சூழ்நிலை காரணமாகவே பயணிகள் விமானத்தில் பயணம் செய்வதை குறைத்திருக்கலாமென கூறப்படுகிறது. (இ)

## அரசியல் நிர்ணயசபைக்கு உறுப்பினர்களை நியமிக்க கட்சிகள் நடவடிக்கை

(கொழும்பு)

அரசியல் நிர்ணயசபைக்கு உறுப்பினர்களை நியமிப்பது தொடர்பாக எதிர்க் கட்சித் தலைவர்கள் எதிர்வரும்புதன் கிழமை கூடித் தீர்மானிக்கவுள்ளனர்.

கொழும்பு மாநகர மேஜரின் இல்லத்தில் இடம்பெறவுள்ளஇக் கூட்டத்தில் எதிர்க் கட்சித் தலைவர்கள் அனைவரும் பங்கு பற்றவுள்ளனர்.

அரசியல் நிர்ணயசபைக்கு எதிர்க் கட்சிகளின் சார்பில் ஐவர் நியமிக்கப்படவுள்ளனர். இதில் யாரை நியமிப்பது என்று இக் கூட்டத்தில் தீர்மானிக்கவுள்ளனர்.

இதே போல் அரசாங்க தரப்பில் நியமிக்கப்படவுள்ளவர்கள் தொடர்பாக அரச தரப்பு பேச்சுவார்த்தைநடத்தவுள்ளது. அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகள் யாவும் தமது சார்பில் நிய

(08ஆம் பக்கம் பார்க்க)

## திருகோணமலைத் துறைமுகத்தை புலிகள் எந்நேரமும் தாக்கலாம்!

### புலனாய்வுப்பிரிவு எச்சரிக்கை

(கொழும்பு)

திருகோணமலைத் துறைமுகம் மீது விடுதலைப்புலிகள் பாரிய தாக்குதலொன்றை தொடுக்கத் திட்டமிட்டுள்ளனரென புலனாய்வுத் தகவல்கள் பாதுகாப்பு படையினரை எச்சரித்துள்ளது;

இதனையடுத்து திருமலைத் துறை முகப் பாதுகாப்புபலமடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது:

நாட்டின் பாதுகாப்புநிலைமைகள் தொடர்பான உயர் மட்ட பாதுகாப்பு மாநாடு பொலிஸ் தலைமையகத்தில் கடந்த வியாழக்கிழமை மாலை பொலிஸ்மா அதிபர் லக்கி கொடித்துவக்கு தலைமையில் நடை பெற்றது.

இம் மாநாட்டில் உரையாற்றிய பொலிஸ்மா அதிபர் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் முக்கிய நிலைகள் மீது பாரிய தாக்குதலை நடத்த புலிகள் முயற்சித்து வருகின்றனர்.

இதனை முறியடிக்கும் வகையில் சகல பொலிஸ் பிரிவுகளிலும் உள்ள முக்கிய நிலையங்களின் பாதுகாப்பை பலப்படுத்த வேண்டுமென தெரிவித்தார்.

இதேவேளைகட்டுநாயக்கா விமானப்படைத்தளம் மீது நடத்தப்பட்ட தாக்குதலால் திணறிப் போயுள்ள படைத் தரப்பு அடுத்த இலக்கு எதுவென தெரியாத நிலையில் குழப்பமடைந்து அங்கு இங்கு என பாதுகாப்பு பரவலாக பலப்படுத்தப்படுகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

## தே. அ. அட்டை விரைவில் விநியோகம்

[யாழ்ப்பாணம்]

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா அவர்களால் நடாத்தப் பெற்ற மக்கள் குறைநிவர்த்தி சேவையின்போது தேசிய அடையாள அட்டைக்காக ஆட்பதிவு திணைக்களத்திற்கு விண்ணப்பம் செய்தவர்களுக்கான அடையாள அட்டைகள்தற்போது யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளன.

இந்த தேசிய அடையாள அட்டைகள் விரைவில் வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் ஊடாக உரியவர்களுக்கு வழங்கப்படவுள்ளதாக ஈ.பி.டி.பி. யின் யாழ். தகவல் தொடர்புத் துறைச் செயலாளர் க. திவாகர் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார். (ந)

## சிறு விளம்பரம்

### கடைகள்விற்பனைக்கு

கதிரேசன் கோவிலடி K.K.S வீதியில் நகைக் கடைக்கு உகந்த (10×30) சதுரடியைக் கொண்ட கடையும் பெரியகடை வீதியில் (மலயான் கபே வீதி) நல்ல வியாபாரம் செய்யக் கூடியதுமான புடைவைக் கடைக்கு உகந்த (14×40) சதுரடியைக் கொண்ட கடையும் விற்பனைக்கு உண்டு. (தொடர்பு கொள்ள T.P யினையும் குறிப்பிடவும்.) விண்ணப்பிக்க வேண்டிய முகவரி விளம்பர இல:226 மே/பா வலம்புரி, யாழ்ப்பாணம்.

(3586)

### (O/L) MATHS

ஆரம்ப அறிவேயில்லாதவர்களுக்கும் இதுவரை சித்தியடையாதவர்களுக்கும் 36 வருட அநுபவமுடைய ஆசிரியரினால் 20 நாட்களில் தொடர் 40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும். தொடர்பு: க. ஆறுமுகநாதன் 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை சுண்டுக்குளி

(3596)

### தேவை

வேப்பம் விதை, இலுப்பம் விதை சேகரிப்பவர் எம்மிடம் கொண்டு வந்து தந்தால் நல்ல விலை தந்து பெற்றுக் கொள்வோம் மல்ரி – ஒயில், கே.கே.எஸ். வீதி, இணுவில்.

(C-3581)

### எறிகணை வீச்சு

(வரணி)

தென்மராட்சிப் பகுதிகளில் விடுதலைப் புலிகளும் அரச படைகளும் பரஸ்பரம் தொடர்ந்தும் எறிகணை வீச்சை மேற்கொண்டு வருகின்றனர்.

(உ-211)

# கைதடியில் மீளக் குடியமர்ந்த ஆயிரத்து 815 குடும்பங்களுக்கு இரண்டாம் கட்டக் கொடுப்பனவு

## 7 ஆயிரம் ரூபா வழங்க அமைச்சர் பணிப்பு

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பிரதேசத்தில் கைதடியில் மீளக் குடியமர்ந்த ஆயிரத்து 815 குடும்பங்களுக்கும் இரண்டாம் கட்ட மீளக்குடியமர்வுக் கொடுப்பனவாகிய 7 ஆயிரம் ரூபாவை வழங்குவதற்கு வடக்கின் அபிவிருத்தி புனர்வாழ்வு - புனரமைப்பு அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா பணிப்புரை வழங்கியுள்ளார்.

நேற்றைய தினம் அமைச்சரினால் கூட்டப்பட்ட தென்மராட்சி மீள் குடியமர்வு கூட்டத்திலேயே இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் அலுவலகத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தில் யாழ். மாவட்ட அரச அதிபர் க. சண்முகநாதன், தென்மராட்சி - பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை உட்பட சகல திணைக்களங்களின் அதிகாரிகளும் சமுகமளித்திருந்தனர்.

யுத்த நடவடிக்கைகள் காரணமாக தென்மராட்சி பிரதேசத்தில் இருந்து இடம் பெயர்ந்த நிலையில் வாழ்கின்ற 'உ' அட்டை வைத்திருப்பவர்களுக்கு மூன்று மாதகாலத்துக்கு நிவாரணம் வழங்குமாறு அமைச்சர் பணிப்புரை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் தென்மராட்சி பிரதேசத்தில் இருந்து இடம் பெயர்ந்த கைதடி, நாவற்குழி தனங்கிளப்பு பகுதிகளைச் சேர்ந்த ஆயிரத்து 420 மீனவக் குடும்பங்களுக்கு தொழில் இழப்பு நிவாரணமாக தலா 3 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படும் என அமைச்சரினால் அறிவிக்கப்பட்டது.

இக் கூட்டத்திற்கு சாவகச்சேரி நகர சபையின் தலைவர் பெ. தனபாலசிங்கம், பிரதேச சபையின் தலைவர் அன்ரன் பொன்னையா ஆகியோரும் சமுகம் அளித்து தத்தமது சபைகளின் வேலைத் திட்டங்களுக்கு புனர்வாழ்வு அமைச்சு நிதியுதவி வழங்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தனர்.

(உ-77)

### நாவலப்பிட்டி சம்பவத்தைக் கண்டித்து

## அடையாள வேலைநிறுத்தம் அமைதி ஊர்வலம்

(கொழும்பு)

நாவலப்பிட்டிப் பகுதியில் கடந்த 12 ஆம் திகதி இடம் பெற்ற இளம் பெண் மீதான பாலியல் வல்லுறவு படுகொலைச் சம்பவத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து, நாவலப்பிட்டித் தோட்டத் தொழிலாளர்கள் நேற்று முன் தினம் அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த அடையாள வேலை நிறுத்தத்தில் 10 ஆயிரத்திற்கும் அதிகமான தோட்டத் தொழிலாளர்கள் பங்கேற்றதுடன், நாவலப்பிட்டி நகரில் அமைதி ஊர்வலம் ஒன்றும் நடை பெற்றது.

இந்த அமைதி ஊர்வலத்தில் 5 ஆயிரத்திற்கும் அதிகமான பொது மக்கள் கலந்து கொண்டனர்.

மேற்படி பாலியல் வல்லுறவுச் சம்பவம் நடை பெற்று இருவாரங்களாகியும் பொலிஸார் குற்றவாளிகளைக் கண்டு பிடிக்கத் தவறி விட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே அடையாள வேலை நிறுத்தப் போராட்டமும் அமைதி ஊர்வலமும் இடம் பெற்றது.

வகுப்புக்குச் சென்று விட்டு திரும்பும் போது கடந்த 12 ஆம் திகதி உமாதேவி (வயது-23) என்ற இளம் பெண் காமுகர்களால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுப் பின் படுகொலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(உ-5)

## நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யா. மாநகரசபை ஊழியர் சிக்கனக் கடனுதவுக் கூட்டுறவுச் சங்கத்திற்கு வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இரண்டு இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளார் இவ்வொதுக்கீட்டில் ஒரு இலட்சம் ரூபா தற்போது வழங்கப்பட்டுள்ளது.

(உ-106)

## வல்லிபுர ஆழ்வார் உற்சவங்கள்

(யாழ்ப்பாணம்)

சரித்திரப் பிரசித்தி பெற்ற வல்லிபுர ஆழ்வார் ஆலய தேர்த் திருவிழா நாளை திங்கட்கிழமையும், நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை சமுத்திர தீர்த்தத் திருவிழாவும், புதன்கிழமை சேணித் தீர்த்தம்' கொடியிறக்கம் என்பனவும் நடைபெறவுள்ளன.

(செ)

## இராசி பலன்

30 - 09 - 2001
(புரட்டாதி 14 ஞாயிறு)
திரயோதசி பி.ப. 3.52வரை
சதயம் மாலை 5-58வரை
இராகுகாலம் 4.32--6.02
சுபநேரம் 9.02-10.32
சித்தம்

**மேடம்**
போசன சுகம், சுற்றுலா, பெரியோர்மதிப்பு

**இடபம்**
இறைதரிசனம், பயணம், உறவுகளின்வருகை

**மிதுனம்**
உடற்சுகம், தியானம், தெய்வ தரிசனம்

**கடகம்**
மனச் சோர்வு, காரியதாமதம், அதிர்ஷ்டக்குறைவு

**சிங்கம்**
பயணம், சயன சுகம், முயற்சிவெற்றி

**கன்னி**
மகிழ்ச்சிக்குறைவு, பயணத் தடை, உறவில்விரிசல்

**துலாம்**
மனத்துணிவு, காரிய வெற்றி கலகலப்பு

**விருச்சியம்**
ஆலயதரிசனம், நிதான செயற்பாடு, புதியமுயற்சி

**தனுசு**
பணவரவு, புதியவர்களின் சந்திப்பு, புகழ்

**மகரம்**
கலகம், மனக்கிலேசம், பணச்செலவு

**கும்பம்**
போசனசுகம், கொண்டாட்டம், மனமகிழ்ச்சி

**மீனம்**
சந்தோஷம், புதியவர்களின் சந்திப்பு, சயனசுகம்

பழைய நேரப்படிகணிக்கப்பட்டது

வளவன்


### சாவகச்சேரி, இணுவில், மானிப்பாய் பரிஸ், கொக்குவில் லயன்ஸ் கழகங்கள் இணைந்து நடாத்தும்

## கண் பரிசோதனை முகாம்

காலம் :-
02. 10. 2001-ம் திகதி செவ்வாய்க்கிழமை
நேரம் :-
முற்பகல் 10.00 மணி
இடம் :-
தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை
(மானிப்பாய் வீதி, தாவடி)

★ கண் சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் எஸ். குகதாசன் அவர்களால் கண் பரிசோதனை செய்து விழிவெண்படலத்தால் (கற்றாக்) பாதிப்புற்றோருக்காக சத்திர சிகிச்சையை மேற்கொள்ள யாழ் போதனா வைத்திய சாலையில் ஒழுங்கு செய்யப்படும். (வறுமைக் கோட்டிற்குட்பட்டோருக்கு கண்ணாடி வில்லைகள் வழங்கப்படும்)

★ எஸ். எம். பெர்னாண்டோ ஸ்தாபனத்தினால் கண்பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வறுமைக் கோட்டிற்குட்பட்டோருக்கு மூக்கு கண்ணாடி வழங்கப்படும்.

குறிப்பு :-
சென்ற வருடம் கொக்குவில், இணுவில், மானிப்பாய் பரிஸ் லயன்ஸ் கழகமுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்ட முகாம்களில் இனங்காணப்பட்ட கற்றாக் நோயாளர்கட்கு முன்னுரிமை வழங்கப்படும்.
சகல கழக அங்கத்தவர்களையும் உரிய வேளையில் சமுகம் கொடுத்துதவுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தலைவர் / செயலாளர்

01. சாவகச்சேரி லயன்ஸ் கழகம்,
02. இணுவில் லயன்ஸ் கழகம்,
03. மானிப்பாய் பரிஸ் லயன்ஸ் கழகம்,
04. கொக்குவில் லயன்ஸ் கழகம்.

(C-2660)


## கட்டடத் திறப்பு விழாவும் நூல் வெளியீடும்

(ஊர்காவற்றுறை)

புங்குடுதீவு, நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புனரமைக்கப்பட்ட கிராமிய வங்கி மேல்மாடி கட்டடத்திறப்பு விழாவும் 'கூட்டுறவு தீபம்' நூல்வெளியீடும் சங்க மாநாட்டு மண்டபத்தில் இன்று மு.ப 10.00 மணிக்கு லயன்டாக்டர் கே. இராசரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் அரசாங்க அதிபர் கே. சண்முகநாதன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக, யாழ் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் செ.கு. சண்முகநாதன், கூட்டுறவு அபிவிருத்தி உதவிஆணையாளர் கணக்காய்வு அலுவலகத்தைச் சேர்ந்த எஸ். கனகசபாபதி, ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் தீவக அமைப்பாளர் என். மதனராஜா, தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ப. விக்கினேஸ்வரன், வேலணை பிரதேசசபைத் தலைவர் என். கருணாகரகுருமூர்த்தி ஆகியோரும்,

கௌரவ விருந்தினர்களாக தீவுப்பகுதி தெற்கு பிரதேசச் செயலர் செ. இரத்தினம், ஊர்காவற்றுறை நெடுந்தீவு பிரதேச செயலர்ஜே எக்ஸ். செல்வநாயகம், யாழ். கூட்டுறவுச் சமாசத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் யாழ். பனை தென்னைவள கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் எஸ். கணேசமூர்த்தி ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

[உ-75]

## அமெ. தாக்குதல்பாணியில் அணுமின் நிலையங்களும் தாக்கப்படலாம் என அச்சம்

(கொழும்பு)

அமெரிக்காவின் உலக வர்த்தகமையம் மீது நடத்தப்பட்ட தாக்குதல் போல உலகின் அணு மின் நிலையம் ஒன்றின் மீதும் தாக்குதல் நிகழ்த்தப்பட்டால் அது பாரிய அழிவை ஏற்படுத்தும்.

இவ்வாறு சர்வதேச அணு சக்தி நிறுவனம் அச்சம் வெளியிட்டுள்ளது.

அமெரிக்கா மீது தாக்குதல் நடத்தியவர்களின் அடுத்த இலக்கு, பாரியஅழிவை ஏற்படுத்தக் கூடிய அணு மின் நிலையங்களைத் தகர்ப்பதாக இருக்கலாமென ஊகம் நிலவுகின்ற இத் தருணத்தில் மேற்கண்டவாறு ஏ.இ.ஏ அமைப்பு அச்சம் வெளியிட்டுள்ளது.

அவ்வமைப்பு மேலும் தெரிவிக்கையில்; உலகில் 440 அணு மின் நிலையங்கள் உளளன. இவற்றில் ஏதாவதொன்று தாக்கப்பட்டாலே பாரிய அழிவு ஏற்படுவதை தடுக்க முடியாது.

சாதாரணமாக அணு மின் நிலையமொன்றின் மீது வெடிப்பொன்று ஏற்பட்டாலே அதன் தாக்கம் பாரிய விளைவு ஏற்படுத்தும். 22 மைல்கள் தூரத்துக்கு கதிர் வீச்சு தாக்கம் காணப்படுவதுடன் 6மைல்ஆரை கொண்ட ஒருபெரும் பிரதேசம்முற்றாக அழியும், அத்துடன் அதன் கதிர் வீச்சுத் தாக்கம் பத்துப் பதினைந்து ஆண்டுகள் நிலைத்திருக்கும் என ஏ.இ.ஏ. அமைப்பு அச்சம் வெளியிட்டுள்ளது.

(இ)

## இலங்கையில் வருடாந்தம் பிரசவ காலத்தில் 260 பெண்கள் மரணம்

(கொழும்பு)

இலங்கையில் வருடம் தோறும் பிரசவ காலத்தின் போது 260 பெண்கள் மரணமடைவதாக சுகாதாரப் பணியகம் தெரிவித்துள்ளது.

இவர்களில் அதிகமானோர் பிரசவத்தின் பின்னர் 45 நாட்களினுள் மரணமடைகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகில் வருடாந்தம் ஆறு இலட்சம் பெண்கள் பிரசவ காலத்தில் மரணமடைகின்றனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

(உ-3)

அப்பாவிப் பொதுமக்களைப் பாதிக்காத வகையில்,

# தென்மராட்சிப் பகுதி மிதிவெடிகள் அவசரமாக அகற்றப்பட வேண்டும்

## யா. மாநகர சபைக் கூட்டத்தில் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)
தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள மிதிவெடிகள் மற்றும் பொறி வெடிகளை சர்வதேச நிறுவனங்களின் உதவியுடன் அகற்றுமாறு கோருவதுடன் இது விடயத்தில் அப்பாவிப் பொதுமக்களைப் பாதிக்காத வகையில் இருதரப்பும் செயற்பட வேண்டும்.

இவ்வாறு கோரும் தீர்மானம் ஒன்று நேற்று முன்தினம் யாழ்.மாநகர சபையில் இடம்பெற்ற மாதாந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

யாழ்.மாநகர முதல்வர் நடராஜா ரவிராஜ் தலைமையில் இடம்பெற்றஇக் கூட்டத்தில் மேலும் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

யாழ். நவீன சந்தையிலுள்ள மலகூடங்களை மக்களின் பாவனைக்கு விடுவதுடன் அவற்றின் தூய்மையினை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உறுதிப்படுத்தல்:

விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் சிபாரிசுடன் அடுத்த ஆண்டின் நடுப் பகுதியில் இருந்து மாநகர சபையின் கடைகளுக்கான வாடகையை அதிகரித்தல், யாழ்.மாநகர சபையின் எல்லைக்குட்பட்ட பகுதியில் மேற்கொள்ளப்படும் பொது வேலைத் திட்டங்களுக்காக நிதிவழங்கும் எந்த அமைப்புக்களும் அந்த நிதியை சபையினூடாகவே வழங்குதல் வேண்டும் ஆகிய தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

அத்துடன், கட்டைப்பிராயில் அமுக்க வெடியில் ஓட்டோ சிக்கியதில் உயிரிழந்தவர்களின் உறவினர்களுக்கு ஆழ்ந்த அனுதாபம் தெரிவிக்கப்பட்டது. (உ-10-19)

## ஆலயம் புனரமைப்பு

(அராலி)
அராலி வடக்கு மயிலியற்புலம் கந்தசுவாமி ஆலயப் புனரமைப்பு வேலைகள் துரித கதியில் நடைபெற்று வருகின்றன: (செ-214)

★ ★ ★ ★ ★

(வல்வெட்டித்துறை)
கம்பர்மலை ஸ்ரீ பெரிய தம்பிரான் ஆலய புனரமைப்பு வேலைகள் துரித கதியில் நடைபெற்று வருகின்றன:

இதுவரை காலமும் இவ்வாலயத்தில் ஒரு வேளைப் பூஜை மட்டுமே இடம்பெற்று வந்தது;

புனரமைப்பு வேலைகள் முடிவடைந்ததும் பூஜை வேளையில் மாற்றம் ஏற்படலாம் எனவும் எதிர் பார்க்கப்படுகிறது: (செ-217)

## நெற் செய்கை ஆரம்பம்

(வல்வெட்டித்துறை)
வடமராட்சி பிரதேசத்தில் நெல் பயிர்ச் செய்கைக்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கடந்த சில தினங்கள் பெய்தமழையைத்தொடர்ந்து வரம்புகள் கட்டி, உழுது பண்படுத்த ஆரம்பித்துள்ளார்கள்.

தொண்டைமனாறு, உடுப்பிட்டி, வல்லை, கம்பர்மலை, ஆகிய பகுதிகளிலேயே பயிர்ச் செய்கை வேலைகள் துரிதமாக இடம்பெறுகிறது:(செ-217)

## போயா தின நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)
யாழ். பகவான் ஸ்ரீ சத்திய சாயிசேவா நிலையத்தில் எதிர்வரும் செவ்வாய்க் கிழமை காலை 9 மணி முதல் போயா தினநிகழ்வுகள் இடம்பெறவுள்ளன: கொடியேற்றம் அஷ்டோரத்திரம், பஜனைஆகியவற்றுடன் நண்பகல் நாராயணசேவையும் இடம் பெறவுள்ளது:
(உ-10)

## பணிப்பாளர் நெடுந்தீவு விஜயம்

(நெடுந்தீவு)
நெடுந்தீவு அபிவிருத்தித் தொண்டர் பயிற்சி நிலையத்திற்கு அண்மையில் வடக்கு அபிவிருத்திப் புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு அமைச்சுப் பணிப்பாளர் எஸ். நல்லையா விஜயம் ஒன்றை மேற்கொண்டார்

அவ்விஜயத்தின் போது தொண்டர்களின் பிரச்சினைகளை கேட்டறிந்ததுடன், அவை விரைவில் தீர்க்கப்படும் எனவும் வழங்கப்படாத சம்பளம் விரைவில் வழங்கப்படும் எனவும் உறுதியளித்தார்; (செ-82)

## உடற்கல்வி டிப்ளோமா செய்முறைப் பரீட்சை 4, 5ஆம் திகதிகளில்

(வல்வெட்டித்துறை)
யாழ். பல்கலைக் கழக உடற்கல்வி டிப்ளோமா கற்கை நெறிக்கு விண்ணப்பித்து எழுத்துப்பரீட்சையில்சித்தியடைந்த மாணவர்களுக்கான செய்முறைப் பரீட்சை எதிர்வரும் 4,5 ஆம் திகதிகளில் யாழ்: பல்கலைக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவ் செய்முறைப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள், நேர்முகப் பரீட்சை ஒன்றுக்கும் அழைக்கப்படவுள்ளனர். உ-217)

## 512 -வது படையணி அதிகாரியுடன் கலந்துரையாடல் நாளை

(யாழ்ப்பாணம்)
யாழ். மாநகர முதல்வர் தலைமையிலான குழுவுக்கும், 512 ஆவது படையணி அதிகாரிக்கும் இடையேயான கலந்துரையாடல் ஒன்று நாளை மு.ப 10; 00மணிக்கு படையணி அலுவலகத்தில் இடம் பெறவுள்ளது.

யாழ். மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள நீர் விநியோக குழாய்களில் சட்ட விரோதமான முறையில் படையினர் மற்றும் பொலிஸார் நீரினைப் பெறுவது மற்றும் ஓடும் வாய்க்கால்களில் தடையினைப் போடுவதால் நீர் தேங்கி நின்று அங்கு ஈ, நுளம்புகளின் பெருக்கத்தினால் தொற்று நோய்த் தாக்கம் அதிகரிப்பது தொடர்பாகக் கலந்துரையாடப்படவுள்ளது:
(உ-10, 19)

## நவாலியில் கமநல கேந்திர நிலையம்

(நவாலி)
நவாலிப் பகுதியில் புதிதாக கமநல கேந்திர நிலையம் அமைக்கும் நடவடிக்கைகளை மானிப்பாய் பிரதேச சபைத்தலைவர் மேற்கொண்டுள்ளார்:

மேற்படி பகுதியில் கமநல கேந்திர நிலையம் இல்லாத குறையைப் போக்கும் வகையில், இப்பகுதியைச் சேர்ந்த சட்டத்தரணியான இ.வசந்தசேனன் வழங்கிய 5 பரப்புக் காணியிலேயே இக் கட்டடம் அமைக்கப்படவுளளமைகுறிப்பிடத்தக்கது. (உ-28)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)
'வேலைத்தள அழுத்தங்களும் அவற்றை எதிர்கொள்ளலும்' என்ற தலைப்பிலான கருத்தரங்கு இன்று பிற்பகல் 3மணிக்கு நல்லூர் பிரதேச சபை கொக்குவில் பொது நூலக கேட்போர்கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் வைத்திய கலாநிதி இ சிவசங்கர் கருத்துரை வழங்கவுள்ளார்:
(உ-3)

## கசிப்பினால் அபிடேகம் கோப்பாயில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)
20போத்தல் கசிப்புடன் கோப்பாய் ஊடாக பயணம் செய்த நபர் ஒருவர் அப்பகுதி இளைஞர்களால் வழிமறிக்கப்பட்டு கசிப்பு முழுவதும் அவருக்கு ஊற்றி அபிடேகம் செய்யப்பட்ட சுவாரஸ்யமான நிகழ்வு கோப்பாய் வடக்குப் பகுதியில் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

பிரஸ்தாப நபர் தினமும் கசிப்புடன் பயணம் செய்வதை அவதானித்த அப்பகுதி இளைஞர்கள் சிலர் காத்து நின்று இந்த கசிப்பு அபிடேக நிகழ்வினை நிறைவேற்றியுளளனர்.

இச்சம்பவத்தை அடுத்து அப்பகுதியில்கசிப்பு உற்பத்தி மற்றும் விநியோகம் வெகுவாக குறைந்துள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்; [க-09]

## மது என எண்ணி விஷ மருந்து குடித்தவர் ஆபத்தான நிலையில்

(யாழ்ப்பாணம்)
மது என நினைத்து விஷ மருந்தைக்குடித்தவர், சுய நினைவிழந்த நிலையில்யாழ். போதனாவைத்திய சாலையின் அவசரசிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்;

கோண்டாவில் மேற்குப் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த ஆறுமுகம் செல்வம் (வயது60) என்பவரே பாதிக்கப்பட்டுள்ளார்:
(உ-9)

## வடமராட்சியில் தொடரும் ஆசிரியர் பற்றாக்குறை

(துன்னாலை)
வடமராட்சி வலயப்பாடசாலைகளில் ஆசிரியர்பற்றாக்குறை நிலவுவதாக த்தெரிய வருகிறது.

வடமராட்சியின் பின் தங்கிய கிராமப் பகுதிகளிலேயே இப் பற்றாக்குறை நிலவுவதாகவும், மேலும் அறியப்படுகிறது.

இதேவேளையில் வடமராட்சியின் ஈலபாடசாலைகளில் தேவைக்கு அதிகமாக ஆசிரியர்கள் கடமை புரிந்து வருவதாகவும் சீரான கற்பித்தல் செயற்பாடுகள் இடம் பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது:

எனினும் பின் தங்கிய பாடசாலைகளின் நலன்கள்தகுந்த முறையில் கவனிக்கப்பட வேண்டும் என்றும் ஆசிரியர் பற்றாக்குறை மற்றும் சீரான கட்டிட வசதிகள் ஏற்படுத்தப்படவேண்டும் என்றும்அப் பகுதி மக்கள் தரப்பில்கருத்து தெரிவிக்கப்படுகிறது.
(க-41)

## பிரிட்டிஷ் அரசு அன்பளிப்பு செய்த குளிரூட்டிகள் திருத்தம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)
பிரிட்டிஷ் அரசினால் யாழ். போதனா வைத்திய சாலைக்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட 4 குளிரூட்டிகளுக்கு ஏற்பட்ட பழுதினைத் திருத்தும் வேலை தற்போது இடம் பெற்று வருகின்றது.

யாழ். எடுத்து வருவதில் ஏற்பட்ட பாதுகாப்பு பிரச்சினைகள் காரணமாக மேற்படி 4 குளிரூட்டிகளும் நீண்ட காலமாக கொழும்புத்துறைமுகத்தில் காத்துக் கிடந்தமையினால் பழுதடைந்த நிலையிலேயே இவ் வருட முற்பகுதியில் இங்கு எடுத்து வரப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ-10)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)
தமிழர் விடுதலைக்கூட்டணி கட்சி உறுப்பினர்களுக்கான கலந்துரையாடலொன்று எதிர்வரும் 2 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணிக்கு ஸ்ரான்லி வீதியிலுள்ள கட்சி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இன்றைய அரசியல் சூழ்நிலை பற்றி ஆராயப்படவுள்ள இக்கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர்களான வீ. ஆனந்தசங்கரி, சி சிவமகாராஜா யாழ். நகரபிதா ந. இரவிராஜ் ஆகியோர் கலந்து கொள்ளவுளளனர். (உ-106-19)

## தொழிலாளியின் கால் முறிவு

(காரைநகர்)
காங்கேசன் துறைமுகத்தில் கப்பலில் இருந்து பொருட்களை இறக்கும் பணியில் ஈடுபட்டிருந்த தொழிலாளி, அரிசி மூடை விழுந்ததனால் கால் முறிந்த நிலையில்யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்;

காரைநகர் களபூமியைச் சேர்ந்த எஸ் நகுலேஸ்வரன் என்பவரே இவ்வாறு கால் முறிந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டவராவார். (உ-238)

## முக்கிய கூட்டம்

(ஏழாலை)
காங்கேசன் துறை லங்கா சீமெந்து நிறுவனத்தின் தொழிற்சங்கநிர்வாக சபைக் கூட்டம்நாளை திங்கட்கிழமை காலை 10 30மணிக்கு இணுவில் காரியாலயத்தில் நடைபெறவுளளதாக முக்கிய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்; (க-12)

## வலிகாமத்தில் சாகித்திய போட்டி

(ஏழாலை)
வலிகாமம் வடக்கு பிரதேச மட்டத்திலான சாகித்திய விழாவிற்கான போட்டி நிகழ்வுகள் எதிர்வரும் 02 ஆம் திகதி தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் இடம்பெறவுள்ளதாக அப்பகுதி கலாசார உத்தியோகத்தர் தெரிவித்துளளார்.

தெல்லிப்பழை பிரதேச செயலர் திருமதி ப. திலகநாயகம் போல தலைமையில் நடைபெறும் மேற்படி நிகழ்வில் இசை, கிராமிய நடனம், கவிதை, கட்டுரை, நாடகம் போன்றன நடைபெறவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார், (க-12)

## பேருந்தில் பணம் கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம)
கடந்த வியாழனன்று பிற்பகல் வேளை, யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியில் சேவையில ஈடுபட்ட பேருந்தில் ஒருதொகைப் பணம் கண்டெடுக்கப்பட்டு, பேருந்து நடத்துநரிடம் ஒப்படைக்கப் பட்டுளளதாகவும், உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது;
[உ]

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)
புன்னாலைக் கட்டுவன் தெற்கு ஆயாக்கடவை சித்தி விநாயகர் தேவஸ்தான பரிபாலனசபையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 4 ஆம் திகதி வியாழக்கிழமை ஆலய முன் மண்டபத்தில் ஏ. உதயகுமார் தலைமையில் நடை பெறவுள்ளது.(உ-2)

## சுகவாழ்வு

பாலுறவு மூலம் பரவும் நோய்களுக்கு கூடிய விரைவில் சிகிச்சை பெற்றுக் கொள்வதன் மூலமும் எச். ஐ. வி/ எய்ட்ஸ் ஏற்படுவதைத் தடுக்க முடியும்; (எய்ட்ஸ் வருமுன் காப்போம்;)

தரிசனம்

# தொ. நு. க. மாணவருக்கு தொழில்நுட்பவியலாளர் சான்றிதழும் வழங்கப்படும்

## பணிப்பாளர் ஜீ. எச். பிறேமசிறி

(யாழ்ப்பாணம்)

யாழ். தொழில் நுட்பக் கல்லூரியில் பயிற்சிநெறியை பூர்த்திசெய்யும் மாணவர்களுக்கு, இனிமேல் தொழில் நுட்பப்பயிற்சிசான்றிதழுடன் தேசிய பயிலுநர் கைத் தொழில் பயிற்சி அதிகார சபையின் 'தொழில்நுட்பவியலாளர்' தர சான்றிதழும் வழங்கப்படவுள்ளதாக தொழில்நுட்பக் கல்லூரிகளின் பணிப்பாளர் ஜீ. எச். பிறேமசிறி தெரிவித்துள்ளார்.

இத்திட்டம் 2002 ஆம்ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதுவரைகாலமும் பயிற்சி நெறியைப் பூர்த்திசெய்யும் மாணவர்களுக்கு இறுதிப் பரீட்சையும் செய்முறைப் பரீட்சையும் யாழ்ப்பாணத்தில் உள்ள பரீட்சைத்திணைக்களத்திலேயே நடத்தப்பட்டு சான்றிதழும் வழங்கப்பட்டு வந்தது.

இனிமேல் மாணவர்களின் செய்முறைப் பரீட்சைக்கு யாழ் தொழில்நுட்பக்கல்லூரிப் பரீட்சகர்களுடன் தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையிலிருந்தும் ஒரு பரீட்சகர் சமுகமளிப்பாரென்றும் தெரிவிக்கப்படுகின்றது. (செ-2)

# வை. எம்.சீ. ஏயினரின் நலன் காக்கும் திட்டம்

(வல்வெட்டித்துறை)

யாழ். வை. எம். சீ. ஏ. யினரால் 'நலன்காக்கும் திட்டம்' என்னும் செயற்றிட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

பதினெட்டு மாதகாலப்பகுதியைக்கொண்ட இத்திட்டத்தில் 50 வறியகுடும்பங்கள் தெரிவுசெய்யப்பட்டு, இத்திட்டச் செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப் படுகின்றன.

இவ்வாறு தெரிவுசெய்யப்படும் குடும்பங்களுக்கு போஷாக்குணவு சம்பந்தமான அறிவுரை வழங்குதல், கர்ப்பிணித்தாய்மார்களுக்கான மருத்துவ பரிசோதனைகள், குழந்தைகளுக்கான நிறை அளவிடல், போஷாக்கு மட்ட அளவிடல், சிறுவர் பாதுகாப்பு நடவடிக்கை, ஆரம்பசுகாதார பராமரிப்பு அறிவினை வளர்த்தல், சுய தொழில் வாய்ப்பிற்கான ஆலோசனைகள் வழங்கல், கரையோர மீன்பிடிசம்பந்தமான பயிற்சிகள் கருத்தரங்குகள் ஊடாக செயற்படுத்தப் படுகின்றன.

இத்திட்டத்திற்கு பல நிறுவனங்கள், சங்கங்கள் பயிற்சிகளையும், ஆலோசனைகளையும் வழங்கிவருகின்றன என நலன்காக்கும் திட்ட இணைப்பாளர் எம். பிரசண்ணா தெரிவித்துள்ளார். (செ-217)

# அடுத்த வாரம் அமைச்சர் டக்ளஸ் மாநகர மேயர் சந்திப்பு

## நிதி ஓதுக்கீடு தொடர்பாக

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபையின் நிதிக்குழு உறுப்பினர்கள், அடுத்தவாரம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்து மாநகரசபைக்கு அவசரமாக ஒதுக்கப்பட வேண்டிய நிதி விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடவுள்ளனர்.

ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் மாநகரசபை உறுப்பினர்கள் கிங்ஸ்லி கணேசன், கனகரட்ணம் ஆகியோர் மேற்படி கலந்துரையாடலுக்கான ஏற்பாடுகளைச் செய்யவுள்ளதாகவும்,

யாழ் மாநகர மேயர் என் ரவிராஜ், பிரதி மேயர் கந்தையன், மாநகரசபை உறுப்பினர்கள் சுபத்திரன், தவநாதன் ஆகியோர் அதில் கலந்து கொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இவ் வருடத்திற்கான நான் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் மாநகரசபைக்கு எந்தவித நிதி ஒதுக்கீடும் மேற்கொள்ளப்படாமை,

நிதி கையிருப்பில் இல்லாத காரணத்தினால் நவீன சந்தைக் கட்டட அமைப்பு வேலைகள் அரைகுறையில் கைவிடப்பட்டுள்ளமை ஆகியவை குறித்து இக்கலந்துரையாடலில் முக்கியமாக ஆராயப்படவுள்ளது. (உ-10-19)

# கட்டாக்காலி நாய்க்கு வீசும் நஞ்சு இறைச்சியால் வீட்டுப்பிராணிகள் பாதிப்பு

(நயினாதீவு)

நயினாதீவுப் பகுதியில் கட்டாக்காலி நாய்களை அழிப்பதற்காக பிரதேச சபை ஊழியர்களால் வீசப்படும் நஞ்சூட்டப்பட்ட இறைச்சி வகைகளால் வீட்டுவளர்ப்புப் பிராணிகளே அதிகம் பாதிக்கப்படுவதாக அப்பகுதிப் பொதுமக்களால் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்விடயத்தினை சுகாதாரப் பிரிவினர் கவனத்தில் எடுத்துக்கொண்டால் வீட்டு வளர்ப்பு பிராணிகள் பாதிக்கப்படமாட்டாதெனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். [செ-218]

# காலாவதியான உணவு பொருட்கள் அழிப்பு

[மந்திகை]

வடமராட்சி கிழக்கில் அண்மையில் சுகாதார பரிசோதகர்கள் நடத்திய அதிரடி நடவடிக்கையின் போது வர்த்தக நிலையங்களில் பெருமளவான காலாவதியான உணவுப் பொருட்கள் மீட்டு அழிக்கப்பட்டன.

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்த சுகாதாரப் பரிசோதகர்கள் அம்பன், குடத்தனைப் பகுதிகளில் மேற்கொண்ட நடவடிக்கையின் போதே, வர்த்தக நிலையங்களில் இருந்த காலாவதியான பால் மா, பிஸ்கற், இனிப்புவகைகள் அழிக்கப்பட்டன. [உ-23]

# அரசியல் நெருக்கடி தொடர்ந்தால் பொருளாதாரம் வீழ்ச்சி காணும்

## தேசிய ஏற்றுமதியாளர் எச்சரிக்கை

(கொழும்பு)

ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசும் பிரதான எதிர்க் கட்சியான ஐக்கியதேசியக் கட்சியும் தமக்கிடையே உள்ள முரண்பாடுகளை தவிர்த்து ஒன்று பட்டு செயற்படாது விட்டால் நாட்டின் பொருளாதாரத்தில் பாரிய வீழ்ச்சி ஏற்படுவதுடன் வரவுள்ள வரவு செலவுத்திட்டத்தில் துண்டு விழும் தொகை மேலும் அதிகரிக்குமென தேசிய ஏற்றுமதியாளர் சங்கம் எச்சரித்துள்ளது.

இலங்கையின் சரிந்து வரும் பொருளாதாரத்தை ஆராய்ந்து அதனை நிவர்த்தி செய்ய அரசாங்கம் செயலணி ஒன்றைஏற்படுத்த வேண்டும்என்றும் சங்கத்தினர் அரசைக் கோரியுள்ளனர்.

விடுதலைப்புலிகளின் கட்டுநாயக்காவிமானத்தளத் தாக்குதலும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆளும் கட்சியில் இருந்து வெளியேறியமையும் பொருளாதாரத்தில் தளம்பல் நிலையைத் தோற்றுவித்துள்ளது.

அமெரிக்க வர்த்தகமையத்தின் மீது மேற்கொள்ளப்பட்டதாக்குதல்கள் காரணமாக அந் நாட்டிற்கான ஏற்றுமதியும் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. என்றும் ஏற்றுமதியாளர் சங்கம் அரசுக்கு சுட்டிக்காட்டியுள்ளது. (வ)

# வைத்தியசாலை முன்பாக வாகனம் நிறுத்த தடை

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலைக்கு முன்பாக வாகனங்களை நிறுத்துவதற்கு நேற்று முதல் பொலிஸார் தடை விதித்துள்ளனர்.

மேற்படி வைத்தியசாலை வீதியில் நிறுத்தப்படும் ஆட்டோ மற்றும் வாடகைக் காரர்கள் மணிக்கூட்டு வீதியிலேயே நிறுத்தப்பட வேண்டும் எனப்பொலிஸார் பணித்துள்ளனர்.

வாகனங்களை ஒதுக்குப்புறமான இடத்தில் நிறுத்துவதால் வீதி விபத்துக்கள் ஓரளவு குறையும் என்ற எதிர்பார்ப்பின் காரணமாகவே இந்த நடைமுறை கொண்டு வரப்பட்டுள்ளது. (இ-104)

# சுகாதாரம் பேணாத பேக்கரி உரிமையாளருக்கு ஆயிரம் ரூபா அபராதம்

(புலோலி)

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள கரணவாய் பேக்கரி ஒன்று சுகாதார விதிகளை மீறியதாகக் குற்றம் காணப்பட்டு பருத்தித்துறை நீதிமன்றத்தால் ஆயிரம் ரூபாஅபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

கரணவாயில் உள்ள கீதா பேக்கரி சுகாதார விதிகளை மீறியது சம்பந்தமாக பருத்தித்துறை சுகாதரா வைத்திய அதிகாரி பிரிவின் பொது சுகாதாரப் பரிசோதகரினால்பருத்தித்துறைமாவட்டநீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது.

பருத்தித்துறை மேலதிக மாவட்ட நீதிபதி ஏ. பிறேம்சங்கர் முன்னிலையில் மேற்படி வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது கீதா பேக்கரி உரிமையாளர் என். இராஜகோபால் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து நீதிபதி அவருக்கு ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார். (உ-52)

# வலிகாமம் வலய கல்விப் பணிப்பாளர் விபத்தில் காயம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் வீரகத்தி இராசையா (வயது 51.) நேற்று முன்தினம் காலை மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கிமுகத்திலும் கையிலும் காயமடைந்த நிலையில் யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அரியாலையில் உள்ள அவரது வீட்டிலிருந்துமருதனார் மடத்தில் அமைந்துள்ள வலிகாமம் வலயக்கல்வி அலுவலகத்துக்கு மோட்டார் சைக்கிள்களில் சென்று கொண்டிருக்கையில், கொக்குவில் நந்தாவில் அம்மன் கோவிலடிப்பகுதியில் நாய் ஒன்று குறுக்கே பாய்ந்ததால் இவ்விபத்துச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. (உ-129)

# இரண்டு மில்லியன் ரூபாசெலவில் நவாலி வழுக்கையாறு நீர் விநியோகத் திட்டம்

(நவாலி)

இரண்டு மில்லியன் ரூபா செலவில் நவாலி வழுக்கையாறு நீர் விநியோகத்திட்டத் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதற்கான நிதியினை வடக்கு-கிழக்கு மாகாண சபை வழங்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நவாலி றங்கன் குளம், வேடுவண் கண்டிகுளம், உலவிக்குளம் போன்றவற்றையும் திருத்தித்தருமாறு நவாலி விவசாயிகள் சம்மேளனம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-228)

# கலை நிலா அரங்கு

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலா மன்றம் நடத்தும் மாதாந்த கலை நிலா அரங்கு நிகழ்வு இன்று மாலை 7.00 மணிக்கு மன்ற அரங்கில் இடம் பெறவுள்ளது. (உ-3)

# நூல் வெளியீட்டு விழா

(துன்னாலை)

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய தேவஸ்தானத்தின் ஏகாதசி, துவாதசி விரத மகத்துவம் நூல் வெளியீட்டு விழா இன்று 2.30 மணிக்கு ஆலய புதிய வசந்த மண்டபத்தில் இ. அன்னலிங்கம் தலைமையில் நடை பெறவுள்ளது.

நூலின் வெளியீட்டுரையை பேராசிரியர் கலாநிதி கோபாலகிருஷ்ண ஐயர் நிகழ்த்தவுள்ளார். (உ-41)

# பருத்தித்துறை திருட்டு சம்பவம்

[மந்திகை]

நள்ளிரவு வேளை வீட்டார் உறக்கத்திலிருந்தசமயம் வீட்டுக் கிடுகுத் தட்டியைப் பிரித்து உள்நுழைந்த திருடர் பெறுமதிமிக்க உடைகளைத் திருடிச் சென்றுள்ளனர்.

இத்திருட்டுச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தின் பின்னால் உள்ள வீடு ஒன்றிலேயே நிகழ்ந்துள்ளது.

உடைகளுடன் சேர்த்து திருடிய வங்கிப்புத்தகங்கள், காணிஉறுதி, சாதகக் குறிப்புக்கள், சூட்கேஸ் என்பனவற்றை வீசிவிட்டு உடைகளை மாத்திரம் திருடர்கள் எடுத்துச் சென்றுள்ளனர். (செ-23)

# ஷெல்வீச்சில் ஒருவர் பலி

(மந்திகை)

தென்மராட்சி கிழக்குகெற்பலி பகுதியில் ஷெல்வீச்சுக்கு இலக்காகி ஒருவர் பலியாகியுள்ளார்.

கடந்தபுதன் இடம் பெற்ற இச்சம்பவத்தில் பளையிலிருந்து இடம்பெயர்ந்து கெற்பலியில் வசித்துவந்த சிதம்பரப்பிள்ளை சிவராசா (வயது41) என்பவரே பலியானவராவர். (ந-4,123)

# அதிக கட்டணம் அறவீடு

(வரணி)

வரணிப்பகுதிதொலைபேசி நிலையங்களில் யாழ் குடாநாட்டில் எங்கும் இல்லாத அளவிற்கு அழைப்புக் கட்டணங்கள் அதிகமானக் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் அதிருப்தி தெரிவித்தனர். (உ-211)

# திருத்தவேலையை பூர்த்தியாக்கக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் அதிகாரி வீதி, இடைக்காடு விமான நிலைய வீதி ஆகியவற்றின் திருத்த வேலைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில் காணப்படுவதால் பொதுமக்கள் போக்குவரத்துக்கு மிகவும் சிரமப்படுவதாகவும்,

வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு வழங்கிய நிதியைப் பயன்படுத்தி வீதித் திருத்த வேலைகளைப் பூர்த்தி செய்யுமாறு வலிகிழக்கு பிரதேச சபைத் தலைவர் பூ. குணசிங்கம், யாழ் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிறைவேற்றுப் பொறியியலாளரைக் கோரியுள்ளார். (உ)

## இன்று ஒரு தகவல்

# நேர்மையும் நியாயமும்

அபு ஹனிபா என்று ஒரு இஸ்லாமியப் பெரியார் இருந்தார். அவர் ஒரு நெசவாளர், மிகவும் ஏழ்மையான நிலைமையில் இருந்தார். அவர் தினமும் தானே கையால் நூல் நூற்று நெசவு செய்வார், துணிகளைத் தயார் பண்ணுவார். அவற்றையெல்லாம் தோளில் போட்டுக்கொண்டு தெருத்தெருவாகப் போய் விற்பனை செய்வார், அதனால் வரக் கூடிய சொற்ப வருமானத்தை வைத்துக்கொண்டு அவர் வாழ்க்கை நடத்திக்கொண்டிருந்தார்.

அவர் ஒருநாள் ஒரு பாலைவனப் பகுதி வழியாகப் போய்க்கொண்டிருந்தார், அவருடன் இன்னும் இரண்டு நண்பர்களும் போய்க்கொண்டிருந்தார்கள், வழியிலே ஒரு ஆள் பேரீச்சம் பழம் விற்றுக்கொண்டிருந்தான், எப்படி விலை என்று விசாரித்தார், 'காசுக்குப் பத்துப்பழம்' என்றான் அவன், அந்த ஊர்க் காசு, 'சரி ஒருகாசுக்குப் பழம் கொடு, அப்படியே சருகில் வைத்துக் கட்டிக் கொடுத்து விடுவழியில்சாப்பிட்டுக்கொள்கிறோம்' என்றார் அந்தப் பெரியவர்.

அதேமாதிரி அந்த ஆளும் ஒரு உலர்ந்த சருகில் பழத்தை வைத்துக்கட்டிக் கொடுத்தான், அதை வாங்கிக்கொண்டு இவரும், மற்ற இரண்டுபேருமாகப் போய்க்கொண்டிருந்தார்கள், அவர்கள் போய்க்கொண்டிருப்பது பாலைவனப் பகுதியாகையால் எங்கேயாவது தண்ணீர் இடைக்கிற இடமாகப் பார்த்து உட்கார்ந்து பழத்தைச் சாப்பிடலாம் என்று நினைத்துக் கொண்டே போய்க்கொண்டிருக்கிறார்கள், வழியிலே ஒரு நீர்' நிலை தெரிந்தது, அங்கே போய் மூவரும் உட்கார்ந்தார்கள். பெரியவர் பொட்டலத்தைப் பிரித்தார், பத்துப் பழம் தானே இருக்கவேண்டும் பதினொருபழம் இருந்தது, ஒரு பழம் அதிகமாக இருந்தது. அதைப் பார்த்தவுடன் பெரியவர் பதறிப்போய் விட்டார் ஒருகாசுக்குப் பத்துப்பழம் தானே அவர் சொன்னது, கைதவறுதலாக அந்தப்பழ வியாபாரி ஒருபழம் கூட வைத்து விட்டரே! இது அவருக்கு நட்டமாச்சே! இப்போது என்ன செய்வதுஎன்று யோசித்தார்.

சரி ... திரும்பிப்போய் அந்தப் பழ வியாபாரியை சந்தித்து இந்த ஒரு பழத்தைக் கொடுத்து விட்டு வந்து விடுவோம் என்று புறப்பட்டார். பக்கத்தில் இருந்த நண்பர்கள் சிரித்தார்கள், என்ன இது? வேடிக்கையாக இருக்கிறது? ஒரே யொரு பேரீச்சம் பழத்துக்காக திரும்பவும் மூன்று கல்தொலைவு திரும்பி நடக்க வேண்டுமா? இது தேவைதானா? என்றார்கள், பெரியவர் அதை ஏற்றுக் கொள்ளவில்லை, வியாபாரத்தில் நாம் காசு கொடுத்து அதற்களவாக ஒரு பொருளை வாங்குகிறோம். அது தான் நியாயம், அதிகப்படியாக எதுவும் கொடுத்தால் அதுவிலக்கப்பட்டபொருள். அது நம்மைச் சேரக்கூடாது அபஹாரமானது.

அப்படி என்று சொல்லிவிட்டு நேராக அந்த வியாபாரியைத் தேடிப் போனார். அந்த ஒரு பழத்தைத் திருப்பிக் கொடுத்தார். ஆனால் அந்த ஆள் 'ஐயா அந்த ஒரு பழத்தை நான் தெரியாமல் கொடுத்து விடவில்லை. உங்கள் தோற்றத்தைப் பார்த்ததும், எனக்கு உங்கள் மேல் ஒரு மரியாதை ஏற்பட்டது.

அதனாலே தான் ஒரு பழத்தை அதிகமாக வைத்துக் கட்டிக் கொடுத்தேன் பரவாயில்லை வைத்துக் கொள்ளுங்கள்' என்றான். ஆனால் இந்தப் பெரியவர் அதற்கு சம்மதிக்கவில்லை.

வணிகத்திலே -வியாபாரத்திலே வாங்குகிறவர் ஒருவர். விற்கிறவர் ஒருவர். இரண்டு பேரும் இவ்வளவு இவ்வளவு என்ற உடன்பாட்டுக்கு வருகிறார்கள். அதன்படி நடக்கிறார்கள். அதுதான் வியாபாரம். அந்தஉடன்பாட்டுக்கு ஒத்துப்போகிறது தான் நியாயம். அந்த நியாயம் தவறி நாம் நடந்து கொள்ளக் கூடாது என்று சொல்லி விட்டு பழத்தைத் திருப்பிக் கொடுத்து விட்டுவந்து விட்டார். நேர்மை - நியாயம் எல்லாவற்றிற்கும் இலக்கணமாய் அமைந்தவர் அந்த இஸ்லாமியப் பெரியார்.

இந்தக் காலத்தில் நாம் அப்படியா நடந்து கொள்கிறோம். நீங்கள் கொஞ்சம் நன்றாக யோசித்துப் பாருங்கள். 'கொசுறு' இல்லையென்றால் இப்போது வியாபாரமே நடக்கிறது இல்லை. அது மட்டுமில்லை. வாங்குகிறவர், விற்கிறவரை எப்படி ஏமாற்றுவதென்று பார்க்கிறார். விற்கிறவர் வாங்குகிறவரைஎப்படி ஏமாற்றுவது என்று பார்க்கிறார். சாமர்த்தியசாலிகள் பிழைத்துக் கொள்கிறார்கள்.

ஒருவர் அப்படித்தான் மாம்பழம் வாங்கினார். ஒரு பழம் ஒரு ரூபா என்றார் கடைக்காரர். பத்து ரூபாவுக்கு பழம் கொடு என்றார் இவர், அவர் பத்துப் பழம் கொடுத்தார். இவர் அடித்துப்பிடித்துப்பேசி ஒரு பழம் அதிகமாகவே வாங்கிக் கொண்டுவந்து விட்டார். வந்த பின்னர் 'பாவம் அந்தக் கடைக்காரர்' என்று மிகவும் வருத்தப்பட்டார், 'நீங்கள் தானே அடித்துப் பிடித்து கட்டாயப்படுத்தி ஒரு பழம் அதிகமாக வாங்கினீர்கள் இப்போது... நீங்களே வருத்தப்பட்டால் எப்படி? என்றாள் வீட்டுக்கார அம்மா.

'நான் அதற்காக வருத்தப்படவில்லை. நான் அவரிடம் கொடுத்தது செல்லாத நோட்டு. பாவம் எப்படி அதை மாற்றுவாரோ என்று நினைத்து வருத்தப்படுகிறேன் என்றார் இவர், இதே நேரத்தில் அந்தக் கடைக்காரரும் கவலைப்பட்டுக் கொண்டிருந்தார். 'புளிப்பான பழத்தை அவர் தலையில் கட்டிப்போட்டோமே. எப்படித்தான் சாப்பிடப் போகிறாரோ' என்று நினைத்து. □

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## வடமராட்சியில் தொடரும்

# தகாத சம்பவங்களைத் தடுக்க விழிப்புக் குழுக்கள் அமைப்பு

(புலோலி)

புலோலி, வல்லிபுரம், துன்னாலைப் பகுதிகளில் தொடர்ந்தும் இடம் பெற்று வரும் திருட்டு மற்றும் பெண்கள் மீது சேஷ்டை புரியும் சம்பவங்களைத் தடுக்கப்பருத்தித்துறை பிரதேச செயலரின் அனுசரணையுடன் விழிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

சம்பந்தப்பட்ட பகுதிகளிலுள்ள கிராம அலுவலர் பிரிவு தோறும் இவ்வாறான விழிப்புக்குழுக்கள் அமைக்கப் படுவதுடன், இவற்றை ஒருங்கிணைத்து சம்மேளனம் ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப் படுகின்றன.

இப்பகுதிகளில், அண்மைக் காலங்களில் தட்டிக்கேட்பார் இன்றித் தொடர்ந்த சட்ட விரோத நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்துவதற்கேற்ற நடவடிக்கைகளை எடுக்குமாறு பொதுமக்கள் பலமுறை வேண்டிக் கொண்டதற்கிணங்கவே இவ் விழிப்புக்குழு அமைப்பு இடம் பெற்று வருகிறது. (உ-52)

## பத்திரங்கள் விரைவில் பெறலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பதிவாளர் அலுவலகத்தில் இந்த வருடம் ஜனவரி மாதம் தொடக்கம் ஓகஸ்ட் மாதம் வரை 52 ஆயிரம் பிறப்பு, இறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக மேற்படி அலுவலக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

மேற்படி பத்திரங்களைப் பெற விரும்புவோர் சரியான விபரங்களுடன் விண்ணப்பித்தால் அவை விரைவில் வழங்கப்படும் என்று குறித்த அலுவலக அதிகாரி தெரிவித்துள்ளார். (எ-9)

## வவுனியாவில் சுவரொட்டிகள்

(வவுனியா)

வவுனியாவில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் தியாகி திலீபனின் படங்களும் மற்றும் சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டிருந்ததாக எமது செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

மேற்படி பிரதேசங்களில் உள்ள பண்டாரிக்குளம், மகாறம்பைக்குளம், தோணிக்கல், பூமாங்குளம், சிறீநகர் ஆகிய பகுதிகளிலேயே குறித்த சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன என்றும் குறிப்பிட்டுள்ளார். [வ]

## சீருடைகளைப் பெறுமாறு அறிவிப்பு

(உடுவில்)

தென்மராட்சிப் பிரதேசத்திலிருந்து இடம் பெயர்ந்து வலிகாமம் பகுதியிலுள்ள பாடசாலைகளில் கல்விபயிலும் மாணவர்களுக்கான சீருடைகளை அப்பாடசாலைகளின் அதிபர்கள் திங்கள், செவ்வாய், வெள்ளி ஆகிய தினங்களில் வலிகாமம் கல்விவலயத்தில் பெற்றுக் கொள்ளுமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (எ-129)

## சிறுவர் முதியோர் தினவிழா

[மந்திகை]

கட்டைவேலி நெல்லியடி ப. நோ. கூ. சங்கத்தின் முதியோர், சிறுவர் தினநிகழ்வுகள் ஒக்ரோபர் 4 ஆம் திகதி சங்க மாநாட்டுமண்டபத்தில் தலைவர் த. சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வின் போது முதியோர்களுக்கு அன்பளிப்புப் பொருட்கள் வழங்கிக் கௌரவிக்கப்படுவதுடன்.

சங்கத்தால் நடத்தப்படும் நான்கு முன்பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு பரிசுப் பொருட்களும் வழங்கப்படவுள்ளன.

நிகழ்வின் இறுதியில் சிறுவர் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன. [செ-83]

# 25 இலட்சம் ரூபா செலவில் அரசாங்க மருந்தகம்

## உயர் மட்டத்தில் முடிவு

(நவாலி)

நவாலி டச்சு வீதியில் ரூபா 25 லட்சம் பெறுமதியான அரசாங்க மருந்தகம் அமைக்க யாழ். அரசாங்க அதிபர் க. சண்முகநாதனும், வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தாவும் கூட்டாக இணைந்து முடிவுசெய்துள்ளனர்.

நவாலி வடக்கு டச்சு வீதியே அரசாங்க மருந்தகம் அமைக்க பொருத்தமான இடம் என உயர் அதிகாரிகள் பரிந்துரை செய்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-22)

# கூரைத் தகடுகள் வழங்கக் கோரிக்கை

(நவாலி)

வலிகாமம் பகுதிகளில் உள்ள இடம்பெயர்ந்தோர் முகாம்களை வேய்வதற்கு கிடுகுகளுக்குப் பதிலாக, கூரைத் தகடுகளை வழங்குமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் சம்பந்தப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலதிக செலவுகளைத் தவிர்க்கும் வகையிலும், நீண்டகாலப் பாவனை நோக்கம் கருதியுமே இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (உ-228)

## சுகாதாரம் பேணத் தவறும்

# தேநீர் கடைகள் மீது சட்ட நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரப் பகுதியில் இயங்கும் தேநீர் கடைகளில், சுகாதாரத்தை உறுதிப்படுத்தும் வகையிலான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதாக நேற்று முன்தினம் இடம்பெற்ற யாழ். மாநகர சபைப் பொதுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி பகுதியில் இயங்கும் தேநீர் கடைகள் பலவற்றில் பெரும் சுகாதாரச் சீர்கேடு நிலவுவதுடன், நாட்சென்ற உணவுப் பொருட்கள் விற்பனையாவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டதை அடுத்தே அக் கடைகள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பாக இணக்கம் காணப்பட்டுள்ளது.

தவிர தேநீர்க் கடைகளின் சுற்றுச் சூழலில் மிகுந்த சுகாதாரச் சீர்கேடு காணப்படுவதுடன், அப்பகுதிகளில் சகிக்க முடியாத துர்நாற்றம் வீசுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-10-19)

## வலி.தென் மேற்கில்

# நலன்புரி நிலையங்கள் புனரமைப்புபணி ஆரம்பம்

(மானிப்பாய்)

வலி தென்மேற்குப் பிரதேச சபை எல்லைக் குட்பட்ட நலன்புரி நிலையங்களில் வாழும் மக்களின் வாழ்விடங்களை வேய்வதற்காக, குடும்பத்திற்கு 125 சோடி கிடுகு மற்றும் அதற்குரிய கயிறு, ஈர்க்கு என்பனவழங்கப்பட்டு வருகின்றன.

மழை காலத்திற்கு முன்னர் அனைத்து நலன்புரி நிலையங்களுக்கும் மேற்படி பொருட்கள் வழங்கப்பட்டுவிடுமென பிரதேச சபைத் தலைவர் அன்ரன் ஜோன்சன் தெரிவித்தார்.

வடக்கின் புனர்வாழ்வுபுனரமைப்பு அதிகாரசபை ஊடாக, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியின் பலனாக, யாழ். குடாநாட்டில் உள்ள இடம் பெயர்ந்தோர் வசிக்கும் நலன்புரி நிலையங்கள் புனரமைப்பதற்கான நிதி ஒதுக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-232)

# குடாநாட்டு ஊடகங்களில் நடுநிலையானது வலம்புரி

## வலி கிழக்கு பி. ச. கூட்டத்தில் தீர்மானம்

[யாழ்ப்பாணம்]

குடாநாட்டில் இயங்கும் ஊடகங்களில்நடுநிலையோடு துணிவாக கருத்துக்களையும் செய்திகளையும் வெளியிடும் பத்திரிகை ''வலம்புரி'' என்று கடந்த புதன்கிழமை நடைபெற்ற வலி கிழக்கு பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தின்போது பிரதேச சபை உறுப்பினர் மா. தர்மராஜாவினால் பிரேரணை கொண்டு வரப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இதற்கு ஆதாரமாக உறுப்பினர் மா. தர்மராஜா, பிரதேச சபைத் தலைவர் பூ. குணசிங்கம் ஆகியோரால் வலம்புரிப் பத்திரிகையின் செய்திகள் ஆராயப்பட்டன. (உ-3)

## சிந்தனைக்கு விருந்து

### "என்னை அனுப்பு"

''ஏக புதல்வன்நான் என்தந்தை என்மடியில்
சாகவெனக் கண்டங்கள் தாண்டியே - தாகமுடன்
வந்தார் சிலநாளில் வாழ்முறையி லேசலித்தே
''இந்தா எனையனுப்''பென் றார்''

'பழையவன்'

# அமெரிக்காவின் நகரங்களைத் தாக்கிய தற்கொலையாளிகளின் குறிப்பேடு கிடைத்தது

(வாஷிங்டன்)
அமெரிக்க நகரங்களானவாஷிங்டன் மற்றும் நியூயோர்க் மீது நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலை மேற்கொண்டவர்களில் ஒருவராகக் கருதப்படும் முஹமது அட்டாவினுடைய இறுதிக் குறிப்பொன்றில் அவருடையதலைவரினால் அரேபிய மொழியில் எழுதப்பட்ட கையடக்கக் குறிப்பொன்றினை அமெரிக்கப் புலனாய்வுத் துறையினர் கைப்பற்றியுள்ளதாக வாஷிங்டன்போஸ்பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது,

இது குறித்து அப்பத்திரிகை மேலும் தகவல் வெளியிடுகையில்; கண்டெடுக்கப்பட்ட அக் கையடக்க குறிப்பில் தற்கொலையாளிகள் தமது பணியை மேற்கொள்வதற்கு முன்அவர்களின்தலைவரினால் வழங்கப்பட்ட அறிவுரைகள் இதில் குறிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது:

தற்கொலையாளிகளின் தலைவரினால் வழங்கப்பட்ட அறிவுரையில் உங்களுடைய பையை, உடையை, உயிரை, அடையாள அட்டையை, கைத்துப்பாக்கிகளை கடவுச்சீட்டுக்களை மற்றும் எல்லா பத்திரங்களையும் சரிபார்த்து கொள்ளுங்கள்; புறப்படுவதற்கு முன்னர் உங்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்தி உங்களுக்கு பின்னால் யாராவது தொடர்கின்றார்கள் என்பதை அவதானித்துக் கொள்ளுங்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை மற்றொரு தற்கொலையாளியின் கையடக்க குறிப்பில் ஆதிம பலத்தை கொடுக்கும் ஆன்மீக வசனங்கள் எழுதப்பட்டுள்ளதாக அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

கடைசி இரவு என்ற தலைப்பில் எழுதப்பட்ட அக் குறிப்பில் நீங்கள் பல அறைகூவல்களை சந்திப்பதுடன் அதனை எதிர்நோக்க வேண்டியும் நேரிடும்.

இறைவனுக்கும் இறைவனுடைய தூதுவனுக்கும் மட்டுமே பணிந்து நடவுங்கள்; உங்களுக்குள் சண்டை போடாதீர்கள், அதுஉங்களை பலவீனப்படுத்திவிடும்.

உறுதியுடன் நில்லுங்கள் அத்துடன் உங்கள் இதயங்களை பரிசுத்தப்படுத்துங்கள் கேளிக்கைக்கும் விளையாட்டுக்குமான நேரம், காலம் கடந்து விட்டதுடன் எதிரிக்குத் தீர்ப்பு வழங்குவதற்கான நேரம் நெருங்கி விட்டது.

ஆகவே இந்த சில மணி நேரங்களில் இறைவனைத் தியானியுங்கள். உங்கள் வாழ்க்கையில் இன்னும் சில மணிநேரங்களே உள்ளன.

அதற்குப்பின்னர் நீங்கள் மகிழ்ச்சிகரமான வாழ்வை தொடங்குவதுடன் முடிவேயில்லாத சொர்க்கத்தைச் சென்றடைவீர்கள்;

என்பன போன்ற வசனங்கள் அக்குறிப்பில் உள்ளதாகவும் வாஷிங்டன் போஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (ந-4)

## வாஜ்பாயின் வெளிநாட்டு பயணம் ஒத்திவைப்பு

(புதுடில்லி)
சிங்கப்பூருக்கும் அவுஸ்திரேலியாவிற்குமான தனது அரசு முறைப் பயணத்தை இந்தியப் பிரதமர் ஒத்திவைத்துள்ளார்.

அவுஸ்திரேலியாவில் நடைபெற இருந்த பொது நலவாய நாடுகளின் தலைவர்களின் கூட்டம் பிற்போடப்பட்டதாலேயே வாஜ்பாயின் பயணமும் பிற்போடப்பட்டதாக இந்திய வெளியுறவு அமைச்சு தகவல் வெளியிட்டுள்ளது.

இத் தகவலை அந்த அந்த நாட்டுத் தலைவர்களுக்கும் அறிவித்துள்ளதாக இந்தியா தெரிவித்தது; (து)

## அல்பேனிய தீவிரவாதிகள் ஆயுதங்கள் ஒப்படைப்பு
### நேட்டோ திருப்தி

(எரிபினோ)
அல்பேனியத் தீவிரவாதிகள் மசடோனிய அரசுடன் செய்துகொண்ட ஒப்பந்தப்படி ஆயுதங்களை ஒப்படைத்துள்ளனர்.

ஆயினும், மசடோனிய அரசு வாக்களித்தபடி, அரசியலமைப்புச்சீர்திருத்தத்தை இன்னமும் மேற்கொள்ளவில்லை.

அல்பேனியப் போராளிகளிடம் ஆயுதக்களைவில் ஈடுபட்ட நேட்டோ கருத்துக்கூறுகையில்; தமது முயற்சி வெற்றியளித்துள்ளதாக தெரிவித்துள்ளது. (உ-2)

## அமெரிக்காவுக்கு அச்சுறுத்தல் விடுக்கும் புதிய கணனி வைரஸ்

(சான்பிரான்ஸிஸ்கோ)
வோட் வைரஸ் என்ற புதிய கணனிவைரஸ் ஒன்று ஈமெயில்மூலமாக வேகமாகப்பரவி கணனிக் கோப்புக்களை அழித்து வருகின்றது,

இதில் நியூயோர்க், வாஷிங்டன் நகரங்கள்மீதான தாக்குதல்கள் பற்றிய சுவையான சம்பவங்கள் பல புகுத்தப்பட்டுள்ளதால் பார்வையாளர்கள் இதனைப் பார்ப்பதில் அதிக நேரத்தைச் செலவிடுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் அமெரிக்காவிற்கு பண ரீதியாக அதிகளவு விரயம் ஏற்படுத்தப்படுவதுடன், அமெரிக்காவிற்கு எதிரான மற்றொரு பயங்கரவாதத் தாக்குதல் இது என்ற அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது, (உ-2)

## காங்கிரஸ் ஜனநாயகப் பேரவை தனித்துப் போட்டியிடும்

(சென்னை)
தமிழக உள்ளூராட்சித் தேர்தலில் திராவிடமுன்னேற்றக் கழகத்துடன் உடன்பாடு காணாத நிலையில் காங்கிரஸ் ஜனநாயகப் பேரவை விலகியுள்ளது.

ப. சிதம்பரம் தலைமையிலான காங்கிரஸ் ஜனநாயகப் பேரவை தி.மு.க. வுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்தது.

இடப்பங்கீட்டில் ஏற்பட்ட சிக்கலால் அது விலகித் தனித்துப் போட்டியிட முன்வந்துள்ளது,

தி.மு.க. கூட்டணியிலிருந்து புதிய தமிழகமும் வெளியேறலாமென்று பேசப்படுகிறது, (து)

## மாக்ஸ்சிஸ்ட் கம்யூனிஸ்ட்கட்சி உள்ளூராட்சித் தேர்தலில் தனித்துப் போட்டியிடும்

(சென்னை)
அ. இ. அ. தி. மு. க. கூட்டணியில் கடந்த தேர்தலில் போட்டியிட்ட மாக்ஸ்சிஸ்ட் கம்யூனிஸ்ட்கட்சி, உள்ளூராட்சித் தேர்தலுக்கு தனியான வேட்பாளர் பட்டியலை வெளியிட்டுள்ளது;

அ. இ. அ. தி. மு. கவிற்கும் மாக்ஸ்சிஸ்ட் கட்சிக்குமிடையே விரிசல் ஏற்பட்டிருப்பதாக அரசியல் அவதானிகள் கருத்துவெளியிட்டுள்ளனர்.

மாக்ஸ்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின், தமிழ் மாநிலதலைவர் சங்கரையா கருத்துத் தெரிவிக்கையில்; இருகட்சிகளுக்குமிடையில் பேச்சுவார்த்தைகள் இடம்பெற வாய்ப்பு உண்டுஎன்றும் அதன் மூலம் தேர்தல் உடன்பாடு வரலாமென்றும் தெரிவித்தார்; (து)

## அமெரிக்க பாதுகாப்புக்கு பாகிஸ்தானுக்கு நிதிஉதவி

(வாஷிங்டன்)
வெளிநாடுகளில் வாழும் தமது பிரஜைகள் தொடர்பாக அமெரிக்கா ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது.

அமெரிக்க நகரங்கள் தாக்குதலுக்குள்ளானதை யடுத்து வெளிநாடுகளில் வாழும் அமெரிக்கர்களுக்கோ வெளிநாடுகளிலுள்ள அமெரிக்கா சொத்துக்களுக்கோ பயங்கரவாதிகளால் பெரும் அச்சுறுத்தல் ஏற்படலாம் என அமெரிக்கா கருதுகிறது;

எந்த நேரமும் உலகிலுள்ள அமெரிக்கர்களோ சொத்துக்களோ தாக்கப்படலாமென்றும் அமெரிக்கர்கள் எந்நேரமும் விழிப்பாக இருக்க வேண்டும் என்றும்அமெரிக்கா தனது மக்களை எச்சரித்துள்ளது;

இதேவேளை, அமெரிக்காவின் பாதுகாப்பக்கருதி பாகிஸ்தானுக்கு 5 கோடி டொலர் உதவி அவசரமாக வழங்கப்பட்டிருக்கிறது.(து)

## பயங்கரவாதத்துக்கு உதவுவதைத் தடுக்கும் சட்டம் நிறைவேற்றம்

(நியூயோர்க்)
பயங்கரவாத ஸ்தாபனங்களுக்கு உதவி வழங்கும் வழிகளை கண்டுபிடித்து அவற்றை தடுப்பது தொடர்பான சர்வதேச சட்டம் ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு சபையில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் சமர்ப்பிக்கப்பட்ட இந்தசட்டமூலம் அண்மைக் காலத்து நெருக்கடிகளின் மத்தியிலும் 24 மணி நேரத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நியூயோர்க் வர்த்தக மையம் மற்றும் பென்டகன் மீதான தாக்குதல்கள் நடைபெற்று மூன்று வாரங்களுள் இந்த சர்வதேச சட்டம் அங்கீகரிக்கப்பட்டுள்ளமையும் அமெரிக்கா மீதான தாக்குதலை தொடர்ந்து உலகநாடுகள் பயங்கரவாதம் பற்றி மிகுந்த அச்சம் கொண்டுள்ளமையையும் கவனிக்கத்தக்கது. (உ-2)

## இந்தியச் சிறையில் வாடிய இலங்கை மீனவர் 13பேர் விடுவிப்பு

(புதுடில்லி)
இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இலங்கை மீனவர்கள் 13 பேர் நேற்று முன் தினம் விடுவிக்கப்பட்டுள்ளனர்;

அத்துடன் இவர்கள் வசமிருந்து கைப்பற்றப்பட்ட படகுகளும் மீளளிக்கப்பட்டுள்ளது; (உ-2)

## உலக தரிசனம்

### நால்வர் பலி

(ஜெருசலேம்)
மத்தியகிழக்கின் காஸா நிலப் பகுதியில் அமைந்திருந்த அகதிமுகாமிற்குள் நேற்றுமுன் தினம் ஊடுருவிய இஸ்ரேலிய பீரங்கிடாங்கிகள் நடத்திய தாக்குதலில் 4 பலஸ்தீனர்கள் பலியாகியதுடன் 22 பேர் படுகாயமடைந்துள்ளனர். (உ-7)

### செய்திப்பரல்

★ வடஅயர்லாந்தின் தலைநகர் பெல்பாஸ்டில் அண்மையில் நடைபெற்ற வன்முறைகளின் போது 300 ற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

★ ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேறும் அகதிகளுக்கு உதவுவதற்கு 252 மில்லியன் அமெரிக்க டொலர் தேவைப்படும் என யு. என். எச். சி ஆர் நிறுவனம் அறிவித்துள்ளது.

★ சீனாவில் கடந்த சில தினங்களாக பெய்து வரும் மழை காரணமாக 50 ஆயிரம் வீடுகள் அழிவடைந்துள்ளன.

★ கனடாவின் சனத்தொகையான3 கோடி 10 இலட்சம் பேரில், 252 ஆயிரம் பேர் குடியேற்றவாசிகள் என கண்டறியப்பட்டுள்ளது. (உ-3)

## தலிபான்களின் உறுதியான போக்கால் பின்லேடனை கையளிக்க வைக்கும் பாகிஸ்தானின் இறுதி முயற்சி தோல்வி

(காபூல்)
ஆப்கானில் ஆளும் தரப்பான தலிபானிற்கு நெருக்குதல் கொடுத்து, ஒஸாமா பின்லேடனை கையளிக்க வைக்கும் இறுதிமுயற்சியில் பாகிஸ்தான் தோல்வியடைந்துள்ளது.

நேற்று முன் தினம், இது தொடர்பான பேச்சு வார்த்தைக்காக மதத் தலைவர்களும் வெளிநாட்டு அமைச்சு மற்றும் உளவுத்துறை அதிகாரிகளும் உள்ளடக்கிய பாகிஸ்தான் தூதுக் குழு ஆப்கானிஸ்தான் சென்றது,

அங்கு தலிபானின் தலைமைச் செயலகம் அமைந்துள்ள கந்தகார் நகரில் ஆன்மீகத் தலைவர் முல்லா முகமட் ஒமரை இந்த தூதுக் குழு சந்தித்துப் பேசிய போது, தலிபான் தலைவர் முகமட் ஒமர் தாம் ஒரு போதும் பின்லேடனை ஒப்படைக்கப் போவதில்லை என திட்டவட்டமாக தெரிவித்திருப்பதாக அறிய முடிகின்றது.

பின்லேடனை ஒப்படைக்காவிட்டால், ஆப்கான் பெரும் வான் தாக்குதல்களை சந்திக்க வேண்டி வருமென அமெரிக்கா எச்சரித்து வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது;

இவ் வேளையில், பின்லேடன் வேறு ஒரு நாட்டுக்குச் செல்வதுகடினம் என்றும் அமெரிக்காவை பகைத்துக் கொண்டு எந்த ஒரு நாடும் பின் லேடனுக்கு அடைக்கலம் கொடுக்க முன் வராது என்றும் கருதப்படுவதனால் பின்லேடன் ஆப்கானில் இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவதானிகள் தெரிவிக்கின்றனர்; (உ-2)

எய்தத்(கு)அரியது இயைந்தக் கால் அந்நிலையே எய்தற்(து) அரிய செயல்.

குறள்

# வலம்புரி

## நடிப்பு வேண்டாம்;

விடுதலைப் புலிகளுடன் அரசுபேசி இணக்கப்பாட்டிற்கு வரும் தீர்வுத் திட்டத்திற்கு ஆதரவு வழங்க ஐக்கிய தேசியக் கட்சி தயாராக இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அக்கட்சியின் முக்கிய தலைவர்கள் பொது ஜன ஐக்கிய முன்னணியின் முக்கிய அமைச்சர்களுக்கு அனுப்பிவைத்த கடிதம் ஒன்றிலேயே தமது தயார் நிலையை வெளிப்படுத்தியுள்ளனர்.

இஃது ஒரு புறம் நடக்க மறுபுறத்தில் அரசு விடுதலைப்புலிகளுடன் பேசி ஓர் இணக்கப்பாட்டிற்கு வரும்போது அதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவைப் பெற தமிழர் விடுதலைக் கூட்டணி உள்ளிட்ட தமிழ் எம்,பிக்களின் உதவியை அமைச்சர் மங்கள சமரவீரா நாடியுள்ளார்.

ஒட்டு மொத்தத்தில் ஆளும் பொது ஜன ஐக்கிய முன்னணி ஐ.தே, கட்சியின் ஆதரவைத் தேடிச் செல்ல, அக் கட்சியோ ஆதரவுதரத் தயார் எனக் கடிதம் அனுப்புகிறது.

இப்போது இருபெரும் கட்சியான பொது ஜன ஐக்கிய முன்னணியும், ஐக்கிய தேசியக் கட்சியும் விடுதலைப் புலிகளுடன் பேசத்தயார். விடுதலைப் புலிகளும் பேச்சுவார்த்தைக்கான சமாதானக் கதவு திறந்தேயிருப்பதாகப் பகிரங்கமாக அறிவித்துள்ளனர்.

இந் நிலையில் அரசு-புலிகள் சமாதானப் பேச்சில் ஈடுபடுவதில் எந்தத் தடையும் இல்லை. ஆனால் பேச்சுவார்த்தை நடப்பதற்கான அறிகுறி தென்படுவதாகவும் இல்லை.

புலிகளுடன் பேசுவதில் அரசு அக்கறை காட்டவில்லை என்ற ஐ. தே. கவின் பிரசாரத்திற்கும், புலிகளுடன் பேசுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவு தரவில்லை என்ற அரசின் குற்றச் சாட்டுக்கும் ஆப்பு வைத்து பொதுமக்கள் மத்தியில்நல்லபிள்ளைக்கு நடிக்கும் ஒரு நாடகமே, புலிகளுடன் பேசுவதற்கு இரு பெரும் கட்சிகளும் தயார் போல் காட்டிக் கொள்கின்றன.

உண்மையில் நாட்டில் இடம் பெறும் யுத்தத்தை முடிவுக்குக்கொண்டுவரும் எண்ணம் அரசுக்கும் ஐக்கிய தேசியக்கட்சிக்கும் இருக்குமாயின்இப்போதே புலிகளுடனான சமாதானப் பேச்சைத் தொடரலாமல்லவா.

### பரமபிதா காட்டிய பாதை

# மற்றவர்கள் வாழ்வுக்காகவும் மன்றாடுங்கள்;



வேகமாக வளர்ந்து செல்லும் உலகிலே வேடிக்கையான சம்பவங்களும் நடைபெறவே செய்கின்றன; கணனி வந்துவிட்ட பின்பும், கஞ்சத்தனமும் கூடவே பயணிக்கின்றது. யாரையும் ஏமாற்றி நாம் வாழலாம். மற்றவர்க்குரியதை நாம் பிடுங்கலாம்; மமதையில் மாற்றானைத் துன்புறுத்தலாம்; இப்படியான எண்ணப்பாடுகள் எட்டிக் காயாக இருந்து இலுப்பைப் பூவாக மாற்றத்துக்கு உட்படத் துடிக்கின்றன. எதிரியை ஏமாற்றுவது கடினமாகையால் இனத்தவரை ஏமாற்றித் தமது காரியங்களைச் சாதிக்கத் துடிக்கின்றார்கள் ஏமாற்றுக் காரர்கள்.

#### அனைவருக்காகவும்

இறைவனுக்கு ஏற்புடையவர்களாக நாம் வாழ வேண்டுமென்றால், மேற்சொன்னவைகளுக்கு எதிராகச் செயற்பட வேண்டும். "அனைவருக்காகவும் மன்றாடுங்கள். பரிந்துரை பேசுங்கள் நன்றி செலுத்துங்கள். இதுவே நம்மீட்பராகிய கடவுள் முன் சிறந்த ஏற்புடைமையாகும்" (1 திமோ. 2:1,4) எல்லா மனிதரும்

# இறையருள் உங்களுக்குக் கிட்டும்

மீட்புப் பெறவும் உண்மையை அறிந்துணரவும் வேண்டுமென அவர் (கிறிஸ்து) விரும்புகிறார். நாம் மற்றவர்களைக் கெடுப்பதை விடுத்து மற்றவர் வாழ்வுக்கு உதவுவதற்கு முன் வரவேண்டும். இனமத பேதங்களை மறந்து நற்செயல் புரிய முன்வர வேண்டும்.

#### நம்பத்தகுந்தவர்

ஏற்றுக் கொண்ட பணிகளை, பொறுப்புக்களை உரிய முறையில் செய்து முடிக்க வேண்டும்; காலந்தாழ்த்துவதால் கடமையில் தவறியவர்களாக நேரிடும். "மிகச் சிறியவற்றில் நம்பத் தகுந்தவர் மிகப் பெரிய வற்றிலும் நம்பத்தகுந்தவராக இருப்பார்." (லூக் 16:10 ஒருவர் ஒருவருக்கு உறு துணையாக நின்று மாதிரிகை காட்ட வேண்டும். நற்கொடைகளை நாம் பெற்றுள்ளோம் என்றால் அந் நற்கொடைகள் என்ற தாலந்தைப் பன்மடங்கு பெருக்கிக் கொள்ள வேண்டும். வெள்ளிக் காசுக்கு ஏழைகளையும், ஒரு சோடிச் செருப்புக்கு வறியவர்களையும் வாங்கலாமென்று நாம் நினைக்கக் கூடாது. இவ்வாறுதான் ஆமோஸ் இறைவாக்கினர்

**அபீர்ராஜன்**

காலத்து மக்கள் வாழ்ந்தார்கள். அதனாலே, அவர் அம்மக்களை கடுமையான வார்த்தைகளால் எச்சரித்தார்.

#### உண்மை வாழ்வு

உண்மையாக வாழும் பொழுது பல சோதனைகள், சுடுசொற்கள், புறங்கூறல்கள் இவற்றைத் தாங்கிக் கொள்ள வேண்டி ஏற்படும் அதற்காக நாம் உண்மையை எடுத்துக் கூறாமலும் பொய்யானவற்றுக்குத் துணை போகின்றவர்களாகவும் இருந்தால் எமது வருங்கால சந்ததியிடம் உண்மையை, ஒழுக்கத்தை எதிர்பார்க்க முடியாது சமயத் தலைவர்கள், ஆசிரியர்கள், வழிகாட்டிகள் உண்மையின் வழிகாட்டலுக்கு உடந்தையாளர்களாக இருக்கின்றார்கள்.

பணமானது பலவற்றையும் பெற்றுத்தரலாம். ஆனால் உண்மையான மகிழ்ச்சியைப் பெற்றுத்தர முடியாது; எனவே, பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற ஆசையிலே போலிகளை உடமையாக்கிக் கொள்ளாமல் அழியாத செல்வங்களை விண்ணுலகிற்கு ஆதாயப் படுத்திக் கொள்வோம். எமக்கு கிடைக்கும் சந்தர்ப்பங்களை நல்லது செய்வதிலே கருத்தாய் செலவு செய்வோம். அப்போது விண்ணுலகில் எமக்குச் செல்வம் குவியும் விவேகமாக நாம் வாழ்வதற்கு இறையருளும் கிடைக்கும்.

### சோதிட பலன்

# இந்துமதத்திற்கு இன்றியமையாத சோதிடம்

# எந்தவொரு மனிதரின் பலன் அறியவும் உதவும்

நல்ல நேரம் கணித்தல், சுபகாரியங்கள் நடத்துவதற்கான நல்ல நாள் பார்த்தல், ஆலயமகோற்சவங்கள், அபிடேக தினங்கள், குருபூசைத் தினங்கள் முதலிய சமய முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளைக் குறித்துக் காட்டுவது பஞ்சாங்கம் எனப்படுகிறது. இது ஐந்து அங்கங்களைக் கொண்டது. அவை வாரம், நட்சத்திரம், திதி, யோகம், கரணம் என்பனவாகும்.

#### யோகங்கள்

யோகம் என்பது ஆகாயத்தில் ஒரு குறித்த இடத்திலிருந்து சூரியனும், சந்திரனும் செல்கின்ற மொத்தத் தூரம். வாரம், திதி, நட்சத்திரங்களின் சம்பந்தங்களினால் ஏற்படுவது இவை அமிர்தம், சித்தம், மரணம் என மூன்று வகைப்படும். அமிர்த, சித்த யோகங்கள் சுபகருமங்களுக்கு விசேடமாகும். இவற்றிற்கு நேரம் குறித்திருந்தால், குறித்த நேரத்தின்மேல் மரணயோகம். இந்தயோகம் சுபகருமங்களுக்குத் தீது. நேரம் குறித்திருந்தால் அதற்கு மேல் சுபயோகம். அந்தந்த மாதத்திற்கு சுபகருமங்களுக்கு விலககப்பட்ட திகதி கரிநாள்; அவமாவாவது ஒரே நாளில் மூன்று திதிகள் கலந்திருப்பது இது சுபகாரியங்களுக்கு விலக்கப்படும் நாள்.

**திருமதி ஞானம் ஞானசேகர ஐயர்**

#### திதிகள்

திதியென்பது ஆகாயத்தில் சந்திரனுக்கும், சூரியனுக்கும் உள்ள தூரம் பூர்வபக்கத்திற் பதினைந்து திதியும் அபரபக்கத்திற்கு பதினைந்து திதியும் உண்டு. திதியைக் குறிப்பிடும் விரதங்களைப் பஞ்சாங்கக் கலண்டர்கள் மூலம் தெரிந்து கொள்ளலாம், பூர்வபக்கம் அமாவாசை வந்ததிலிருந்து பௌர்ணமி வரைபதினைந்து நாட்களாகும். பூர்வ பக்கம் -சுக்கில பட்சம், வளர்பிறை எனவும் கூறப்படுகிறது. திதிகள் பிரதமை, துதியை, திருதியை, சதுர்த்தி, பஞ்சமி, சஷ்டி, ஸப்தமி, அட்டமி, நவமி, தசமி, ஏகாதசி, துவாதசி, திரயோதசி, சதுர்த்தசி, பூரணை எனப் பூர்வபக்கத்தில்வரும். அபர பக்கம் பூரணை வந்ததிலிருந்து அமாவாசை வரை பதினைந்து நாட்கள், இது கிருஷ்ணபட்சம், தேய் பிறை எனவும் குறிப்பிடப்படுகிறது; திதிகள் பிரதமை, துதியை, திருதியை, சதுர்த்தி, பஞ்சமி, சஷ்டி, ஸப்தமி, அட்டமி, நவமி, தசமி, ஏகாதசி, துவாதசி, திரயோதசி, சதுர்த்தசி, அமாவாசை என வரும், இவ்வாறு பன்னிரண்டு இராசிகளில் ஒன்பது கிரகங்கள் ஒவ்வொரு நட்சத்திர பாதங்களிலும், சஞ்சரித்து வருகின்றன.

#### ஜாதகம்

ஒரு குழந்தை பிறந்ததும் திகதி, நட்சத்திரம், நேரம் இவற்றைச் சரியான முறையிற் குறித்து சோதிடம் கணிப்பீடு செய்பவரிடம் கொடுத்தால் ஜாதகத்தினைக் கணிப்பிடுவார் சிட்சை வியாகரணம், நிருத்தம், சந்தஸ், கல்பம், சோதிடம் ஆகிய ஆறும் வேதாங்கமானசாத்திரங்களாகும். இதில் கண் போன்றது சோதிடம். முற்பிறவியில் செய்த நல்லவை, தீயவை, அவற்றின் பயனாக இப்பிறவியில் நாம் பெறப் போகும் பலன்கள் இவற்றை முன் கூட்டியே தெரிந்து கொள்ள உதவுவது தான் சோதிட சாத்திரம். சாத்திரமென்றால் சாசனம் அல்லது கட்டளையென்பதாகும், இறைவன் இட்ட கட்டளை (சாசனம்) தான் சாத்திரம்.

சிருட்டி கர்த்தாவான பிரமா மனிதர்களின் (நெற்றி) தலையில் அழுத்தமாக எழுதியுள்ள அட்சர வரிக்கு ஜாதகம் என்று பெயர். பன்னிரண்டு இராசிகளில் ஒன்பது கிரகங்களும் என்னென்ன நிலையில்இருக்குமென்பதைச் சோதிடர் குறிப்பிடுவார். பிள்ளை பிறந்தவுடன் என்ன கிரக நிலையில் உள்ளதோ அதன்படி பலன்களும் இடம் பெறும். வாழ்க்கையும் அமையும். ஒவ்வொரு கிரகத்துக்கும் எத்தனை வருடம் அதன் ஆட்சியுண்டு என்பதையும் கணக்கிட்டுள்ளனர். பிறக்கும் பொழுது உள்ள நட்சத்திரத்தைப் பொறுத்து ஜனன திசையும் அமையும். கிரகநிலையையும், ஜனன திசையையும்கொண்டு பலன்களைத்தகுந்தசோதிடரிடம்தெரிந்துகொள்ளலாம்.

## தினசரி தியானம்

### ஈசன் நிலை

அச்சம் ஆங்காரம் அகத்தடக்கினால் பின்னை
நிச்சயமாம் ஈச நிலை

-ஔவைக் குறள்-

புறப்பட்ட இடமாகிய உன்னையே வந்தடைய ஈசா, நான் ஓயாது முயன்று கொண்டிருக்கின்றேன்.

இயற்கையில் ஒவ்வொரு பொருளும் தன் மூலஸ்தானத்தையே போய்ச் சேர முயன்று கொண்டிருக்கிறது. கடலினின்று புறப்பட்ட நீராவி இறுதியில் கடலை எட்டி விடுகிறது, மனிதன் கடவுளிடத்திலிருந்து புறப்பட்டவன். அவனிடத்துள்ள மனோவிகாரங்களாகிய அச்சம் அகங்காரம் ஆகியவைகளை ஒழித்தால் அவன் மூலஸ்தானத்தை எட்டி விடுகிறான்.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்.

## புதிய தூதர் நியமனம்

(கொழும்பு)

பிரான்ஸ் நாட்டுக்கான புதிய இலங்கைத் தூதராக சந்திரா எமனுவா விக்கிரமசிங்காவை நியமிப்பது என்று இலங்கை அரசு தீர்மானித்துள்ளது.

இது வரை இலங்கை தூதராகபிரான்சில் பணியாற்றிய கிறிஸ்தோபர் தனேசன் காபினூட்டியின் இடத்திற்கு சந்திரா எமனுவ விக்கிரம சிங்க நியமிக்கபபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-2)

# வடபுல முஸ்லிம்களின் விவகாரம் மட்டக்களப்பு முஸ்லிம் பிரதிநிதிகள் விரைவில் புலிகளைச் சந்திப்பார்

[மட்டக்களப்பு]

வடபுலத்து முஸ்லிம் மக்களின்நிலைகுறித்து விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த மட்டக்களப்பு முஸ்லிம், சமூக சமயப் பிரதிநிதிகள் முயற்சிசெய்து வருகின்றனர்.

இதுதொடர்பாக ஏறாவூர் முஸ்லிம் அமைப்பைச் சேர்ந்த ஏழுபேர் கொண்ட குழு ஒன்று, அண்மையில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்பு வதிவிடப் பிரதிநிதி ஆமின் குறோரைச் சந்தித்து விடுதலைப் புலிகளுடன்பேச்சு நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்து தருமாறு கோரிக்கை விடுத்தனர்.

இதேவேளை, அண்மையில் விடுதலைப்புலிகளின் உறுப்பினர் கரிகாலனைச் சந்தித்த மட்டு. ஆயர் கிங்ஸ்லி சுவாம் பிள்ளை முஸ்லிம்மக்களின் நிலைகுறித்துப்பேசியபோது, முஸ்லிம்களின் பிரச்சினைகளை அவர்களின் பிரதிநிதிகள் மூலம் நேரில் அறிய கரிகாலன் விருப்பம் தெரிவித்ததாகவும் அறியப்படுகிறது. (ந)

## பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

2000 ம் ஆண்டு உயர் தரப் பரீட்சைக்கு தோற்றி பல்கலைக்கழக வெட்டுப்புள்ளியால் பாதிக்கப்பட்டஅனைத்துத்துறை மாணவர்களுக்குமான விசேடகலந்துரையாடல் ஒன்று இன்று பி.ப 2மணிக்கு யாழ் கான்னா திட்டியில் உள்ள நியூ சயன்ஸ் ஹோல் கல்விநிலையத்தில்நடைபெறவுள்ளதென அறிவிக்கப் பட்டுள்ளது (ந)

## மீசாலையில் வெடி குண்டு

(அளவெட்டி)

மீசாலை புத்தூர் சந்திப் பகுதியில்அநாதரவாககிடந்த வெடி குண்டொன்றினை இராணுவத்தினர் கண்டெடுத்துள்ளனர்.

நேற்று ரோந்துப் பணியில் ஈடுபட்ட படையினரே இக் குண்டை மீட்டு செயலிழக்கச் செய்துள்ளனர். (ந-237)

## விளையாட்டு விழா இன்று

(இருபாலை)

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் சனசமூகநிலையத்தினதும் குமரன் விளையாட்டுக்கழகத்தினதும் ஆதரவில் இயங்கும் பாலர் பாடசாலையின் விளையாட்டு விழா இன்று பி.ப 2.30 மணிக்கு ச.தெட்சனாமூர்த்தி தலைமையில் நடைபெறும்.

கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறும் இந்நிகழ்வில் நல்லூர்பிரதேச சபைத் தலைவர் க.மணிபல்லவராஜன் பிரதம விருந்தினராகவும், கோண்டாவில் இராமகிருஷ்ண வித்தியாலய உப அதிபர் ச.வாமதேவன், கிராம உத்தியோகஸ்தர் சி பன்னீர்செல்வம் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர். (இ-221)

### தற்கொலையாளி.

கொலையாளி பயன்படுத்தும்அங்கி, பாரிய தற்கொலைத்தாக்குதல் ஒன்றை நடத்தும் திட்டத்துடன் மறைத்து வைக்கப்பட்டிருந்தது. இப் பகுதியில் அரசியல் தலைவர்கள் மற்றும் பாதுகாப்பு உயரதிகாரிகள் வசிக்கின்றனர்.

இவர்களில் யாரை இலக்கு வைத்து தாக்குதல் நடத்த திட்டமிடப்பட்டது, தாக்குதலை நடத்தும் சூத்திரதாரியார் என்பனகுறித்து பொலிஸார் விசாரணைகளை முடுக்கிவிட்டுள்ளனர்.

அத்துடன் கறுவாத் தோட்டப்பகுதி, விகாரமகா தேவி பூங்கா சூழல் பொலிசாரால் சல்லடை போட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

இத்தேடுதலின் போது தமிழ் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டு தீவிர விசாரணைக்கு உட்படுத்தப் பட்டுள்ளார்.

தலைநகருக்குள் பாரிய தற்கொலைத் தாக்குதலை நடத்தும் ஒரு திட்டத்தின் ஆரம்பத்தின் ஆரம்ப கட்டத்தில்தற் கொலை அங்கிகண்டு பிடிக்கப்பட்டு விட்டது. இல்லையேல் பாரிய அனர்த்தம் நிகழ்ந்திருக்குமென பொலிஸார் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை தற்கொலை அங்கியை தயார் நிலையில் பேணிய தற்கொலையாளி இதுவரை கைது செய்யப்படவில்லை. என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. [இ-வ04]

30 ஆண்டு காலமாய் குன்றாத தரம் வாய்ந்த
சுகாதார முறைப்படி உணவிற்கும் வைத்தியர்களுக்கும்
விஷேசமாக தயாரிக்கப்பட்டது.
சுத்தமான
**வி.எஸ்.பி. நல்லெண்ணெய்**
தயாரிப்பாளரும், ஏகவிநியோகஸ்தரும்
**பரிமளா ஸ்ரோர்ஸ்**
26A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(கி/1986)

# கிராம உத்தியோகத்தரை திருடர்கோஷ்டி தாக்கியது

(அளவெட்டி)

சுந்தரோடைப் பகுதியைச் சேர்ந்த கிராம உத்தியோகத்தர் ஒருவர் திருடர் குழுவொன்றினால் தாக்கப்பட்டு வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினமிரவு இடம்பெற்றுள்ளது

திருட்டுச் சம்பவம் ஒன்றில் ஈடுபட்ட மேற்படி திருடர் கோஷ்டி அங்கு காவலில் இருந்த விழிப்புக் குழுவினரிடம் வசமாகமாட்டிக் கொண்டனர்.

இவர்களின் அடையாள அட்டையை பறிமுதல்செய் விழிப்புகுழுவினர் அவற்ை பிரஸ்தாப கிராம சேவைய ளரிடம் ஒப்படைத்தன. இதனால் ஆத்திரமுற்ற திருடர் கோஷ்டி அவரைக் கண்டபடி தாக்கியது.

இது பற்றிய விசாரணைகளை சுன்னாகம் பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-237)

# நம்பிக்கையில்லாப்பிரேரணை இறுதிநேரத்தில் முடிவு எடுக்கப்படும்

## முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானம்

(கொழும்பு)

பொதுஜனஐக்கியமுன்னணி அரசு மீது ஐக்கியதேசியக் கட்சி கொண்டு வந்துள்ள நம்பிக்கை இல்லா தீர்மானத்தை ஆதரிப்பதா? இல்லையா? என்பது குறித்து இறுதி நேரத்தில் முடிவு எடுக்கப்படும் என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் அதி உயர் பீடம் தீர்மானித்துள்ளது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையில் நேற்றுக் கூடிய இந்த அதி உயர்பீடம் நேற்று நள்ளிரவு வரை நம்பிக்கை இல்லாப் பிரேரணை தொடர்பாக தீவிரமாக ஆலோசனை நடத்தியது.

ஐக்கிய தேசியகட்சியினால் நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தின் போது சமர்ப்பிக்கப் பட்ட நிலையில் நம்பிக்கை இல்லாப் பிரேரணையை பாராளுமன்றத்தில் விவா திற்கு எடுத்தபின்னரே பிரே ணைக்கு ஆதரவாக வா ளிப்பதா அல்லது எதிர் வாக்களிப்பதா? என்றுமுடி செய்வதென தீர்மானிக் பட்டுள்ளது. (வ)

### க.பொ.த --

யில்; உயர்தரப் பரீட்சை மோசடி தொடர்பாக 220 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இவற்றில் விடைகளை பார்த்து எழுதியமை, பிற மாணவர்களுக்கு விடைகளை பார்த்து எழுத சந்தர்ப்பம் அளித்தமை, சுட்டிலக்கங்களை மாற்றியமை போன்றன குறிப்பிடத்தக்கவை.

அத்துடன் றத்தொலுகம பாடசாலையில் தனியார் பரீட்சார்த்தி ஒருவர்கையடக்க தொலைபேசியை உடலில் பொருத்திக் கொண்டு விடையை கேட்டெழுதி மோசடியில ஈடுபட்டுள்ளார். இது சம்மந்தமான விசாரணைகள் தற்பொழுது இடம் பெறுகின்றன.

பரீட்சை நிலையங்களில் அட்டவணைகள் மற்றும் கல்குலேட்டர்கள்என்பனவற்றை வைத்திருந்தமை தொடர்பாகவும்விசாரணைகள் நடைபெறுகின்றன.

ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சை தொடர்பாக இதுவரை 41 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இவற்றில் பெரும்பாலானவை பரீட்சார்த்திக்கு பெற்றோர் உதவியமை குறித்த முறைப்பாடுகளே காணப்படுகின்றன.

இவை தொடர்பான விசாரணைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வாறான முறைப்பாடுகள் கிடைப்பது மாணவ சமுதாயத்தின் பின்னடைவையே வெளிப்படுத்துவதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

### காலியில்

போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் வடக்குக் கிழக்கைச் சேர்ந்தவர்கள் எனவும் இவர்களை தொடர்ந்து விசாரணை செய்து வருவதாகவும் காலி நகரப் பொலிசார் தெரிவித்துள்ளனர் (ந-4)

### உறுப்பினர்

மிக்கப் படவுள்ள உறுப்பினர்களின் பெயர்களை அறிவித்துள்ளன.

இதேவேளை நிதிதிட்டமிடல்குழு, லஞ்ச ஆணைக்குழு, ஊழல் தடுப்புக்குழு, மனித உரிமைகள்குழு ஆகியன அமைப்பது தொடர்பாக ஜே.வி.பியும் - அரசாங்கமும் இவ்வாரம் சந்தித்துப் பேசவுள்ளதாக ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார். (வ)

### 116இலங்கை

கட்டுநாயக்கா விமான நிலையத்தில், விமானநிலைய குற்றத்தடுப்பு பொலிசாரினால் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இவர்களை ஏற்றிச்சென்ற இரு படகுகளில் ஒன்று இலங்கைக்கொடியையும் மற்றது உக்ரேன் நாட்டுக் கொடியையும் தாங்கியிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. படகுகள் உரிமையாளர் இருவரும் ஏடன் துறைமுக அதிகாரிகளினால் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

ஏடன்துறைமுக அதிகாரிகளினால் திருப்பி அனுப்பி வைக்கப்பட்ட 116 பேரில் பெரும்பான்மையானோர் வடக்கு கிழக்கு மற்றும் மலையகத்தை சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஆசிய நாட்டவர்களை ஐரோப்பாவிற்குள் சட்டவிரோதமான முறையில் அழைத்துச்செல்வதற்கு யேமன் ஒரு தளமாக உபயோகிக்கப்படுவதுகுறிப்பிடத்தக்கது. வ]

## துப்பாக்கிச் சூட்டில் பலி

(கொழும்பு)

கொழும்பு கிராண்ட்பாஸ் பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை இனந்தெரியா நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தினால் ஒருவர் பலியானார்.

துவிச்சக்கரவண்டியில் சென்றஇருவர்கிராண்ட்பாஸ் வீதியில் வைத்து மேற்படி நபர் மீதுதுப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர்.

இவர் தமிழ்ப் பெய கொண்டிருந்தாலும் முஸ் மதத்தைச் சேர்ந்தவர் பொலிஸார் தெ துள்ளனர். (உ

### புலிகள்

என்ற முடிவை வெளியி உள்ளது.

இது தொடர்பாக இலங்கை வெளியுறவு அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் கடந்த இரண்டு வருடகாலத்தில் விடுதலைப் புலிகள் கட்டுநாயக்கா தாக்குதல் உட்பட பல பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர் இதனால் அவர்கள் மீதான தடை மேலும் நீடிக்கப்படுமென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை அண்மையில் அமெரிக்க முக்கிய நகரங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலுடன் விடுதலைப் புலிகள் உள்ளிட்ட மூன்று இயக்கங்கள் தவிர 27 அமைப்புக்களுக்கு தொடர்புள்ளதாக அமெரிக்க இராஜாங்க திணைக்களம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இந்நிலை, விடுதலைப் புலிகள் மீது அமெரிக்காவுக்குள்ள நல்லஅபிப்பிராயத்தை வெளிப்படுத்துவதால் அவர்கள் மீதான தடை மேலும் நீடிக்கப்பட மாட்டாதெனவும் நம்பப்படுகிறது. (இ)

**மின் பாவனையாளர்களே!**
★ 'சக்தி சேமிப்பு' மின்குமிழை பாவியுங்கள்!
☆ 80 வீத மின் கட்டணத்தை மீதப்படுத்துங்கள்!!
★ மின் பற்றாக்குறையை நீக்க உதவுங்கள்!!
JAFFNA TECHNICAL INSTITUTE.

இப் பத்திரிகை "வலம்புரி" அன் கோ ஸ்தாபனத்தாரால் இல: 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001-ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 30-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.